எழுத்து

நரகம் முதல் பச்சையம் வரை
இரா. அருள்

தத்துவமும் இலக்கியமும்
கி.ரா

சோதனைக்காரர்

நமது படைப்புக்கள்
ஆ. ம. ராமச்சந்திரன்

பிச்சமூர்த்தியின் இலக்கிய ஸ்தானம்
தருமு சிவராமு

வளரும் தமிழ்
சு. சங்கரசுப்ரமண்யன்

கவிதைகள்
எஸ். வைதீஸ்வரன், எழில்முதல்வன், தமிழ்நாடன், பூ. மாணிக்கவாசகம், த. நா. ஸ்ரீகாந்தன், ஜார்ஜ் பொவரிங், பி. சோணாசலம்

புதுமைப்பித்தன்
(சொ. விருத்தாசலம்)
25-4-1906 – 30-6-1948

CONNEMARA ... LIBRARY
6 - JUL 1966
MADRAS

ஜூன் 66

91

50 பைசா

8-ம் ஆண்டு
ஏடு 91
ஜுலை
1966

எழுத்து

ஆசிரியர் :
சி. சு. செல்லப்பா

தலையங்கம்

புதுமைப்பித்தன்

பதினெட்டு ஆண்டுகள் ஆகிறது புதுமைப் பித்தன் மறைந்து. இலக்கியத்தில் குறிப்பாக சிறுகதையில் உருவம், உள்ளடக்கம், மொழி மூன்றிலுமே சோதனை-சோதனை-சோதனை அப்படிச் செய்த ஒரு படைப்பாளி. அவன் வாழ்வே சோதனையாக முடிந்தது தன்னைச்சுற்றி உள்ள தமிழ் சமூகத்தை அவன் பார்த்தான். பாசாங்கும், பொலியும் வேஷமும்தான் சுற்றும்முற்றும் மனப்பிணி பிடித்த சமூகத்தை சாடினன். அவன் வாழ்வே உடல் பிணியால் முடிந்தது ஆனல் அவனுக்குப் பின்? அவன் செய்த இலககிய சோதனை ஓங்கி நிற்கிறது. அவன் சாடினதும் எகிறி நிற்கிறது. அவன் எழுத்தும் கருத்தும் சாஸ்வதம் பெற்றுவிட்டன.

புதுமைப்பித்தன் இன்றிருந்தால்? இன்று அறுபதாண்டு விழா நடத்திக் கொண்டிருப்போம கொடுத்துவைக்காததுக்கு துக்கப்படவேண்டிய தில்லை. படைப்புகள் இருக்கே நமக்கு. போதுமே விழா கொண்டாட. இந்த ஆண்டு மீதி முழுவதும புதுமைப்பித்தன் படைப்புகளை ஆராயும் கருத்தரங்கங்கள் நடத்துவதைவிட வா ஒரு கவுரவிப்பு தேவை ஒரு படைப்பாளிக்கு? தமிழகத்தில் உள்ள எழுத்தாளர் சங்கங்கள் வாசகர் வட்டங்கள் திட்டமிட்டு செய்தால் புதுமைப்பித்தன் நினைவுக்கு மட்டும் இல்லை. இலக்கிய விமர்சன வளர்ச்சிக்கும் பயன்படும்.

குறிப்புக்கள்

எழுத்தரங்கத்தின் இரண்டாவது கூட்டத்திற்கான தலைப்பு இலக்கிய சிந்தனைகள் என்று தேர்ந்தெடுக்கப்பட்டு கலந்து கொண்டவர்கள் தலைப்பை ஒட்டிய தங்கள் பொதுவான கருத்துக்களை வழங்கினர்கள். இலக்கிய உலகின் நேரிடையான வீச்சு பற்றியும் புறவுலக பாதிப்பு பற்றியும் அவரவர் தங்களுடைய தெளிந்த கருத்துக்களை அழுத்தமாக வெளியிட்டதைப் பார்க்கும் போது, அடிப்படையில உணர்வு பூர்வமாக சிந்திக்கத் தெரிந்தவர்கள் ஒன்றுகூடி உரத்த குரலில் தங்கள் இலக்கிய மனதைத் திறந்து காட்டும்போது நல்ல பலன் விளையும் என்பதைக் காண முடிந்தது. கலா ரீதியாக தத்துவ ரீதியாக பாலுமை ஆதிக்கமான பார்வைகள் அவரவருக்கு இருந்தது மட்டுமின்றி இலக்கிய விளைச்சலின் தரம் பற்றிய நிதானமும அனைவருக்கும் இருந்ததை உணர வாய்ப்பு ஏற்பட்டது. இலக்கியம் வளர்த்த ஏடுகள், தனித்தன்மை பூண்ட எழுத்தாளர்களின் பெயர்களெல்லாம் ஒளிவு மறைவின்றி பரிமாறிக் கொள்ளப்பட்டன. சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை, கவிதை என்று துறைவாரியாக பரவலாக ஆராய்ந்து எண்ணங்கள் வெளிப்பட்டதில் பழைய தடத்தைப்பற்றி நிற்காமல் புதிய பார்வையினூடே மதிப்பீடுகள் வெளிக்கொணர வேண்டிய அவசியம் வற்புறுத்தப்பட்டது. உதாரணமாக, 'நாணல்', திருச்சிற்றம்பலக் கவிராயர், தே. சி. எஸ். அருணசலம் போன்றவர்கள், கவிஞர்கள் வரிசையில் பழைய மரபுவாதிகளுக்கும் இன்றைய புதுக்கவிதைக்காரர்களுக்கும் இடைப்பட்ட மூன்ருவது ரகத்தவர்களாக கொள்ளத் தக்கவர்கள் என்ற கருத்து வெளிப்பட்டதும், அப்படி மூன்ருவது பிரிவாக ஏற்காமல் மரபை மீறிய முயற்சியில் முன்னேடிகளாகக் கணிக்கமுடியுமா என்பது ஆய்ந்து நிர்ணயிக்க வேண்டியது அவசியம் என்ற மறு கருத்து எழுந்ததும் குறிப்பிடத் தக்கதாகும்.

சிறுகதை :

'சிறுகதை' பற்றி எழுத்தரங்கத்தின் மூன்ருவது கூட்டம் கவனம் செலுத்தியது. பேச்சைத் துவக்கி வைத்த சி. சு. செல்லப்பா, சிறுகதை பற்றிய தனது அணுகல் உருவம், உள்ளடக்கம், நடை என்ற மூன்று பிரிவுகளில் அமைந்து நிற்கும் என்று கூறி சிறுகதைத் துறையின் இன்றைய வீழ்ந்த நிலைக்கான காரணங்களை விளக்கினர் அடுத்துப் பங்கு பற்றிய பலரில் இன்றைய பத்திரிகைக் கதைகளை அப்படியே எடுத்துவைத்து அலசிக் காட்டியதும், உத்தி ரீதியான புதுமைகள் மேற்கொள்ளபபடாதது கதைக்கருவுக்கான விஷயங்களில் பழைய சரக்கையே சற்று மாற்றித் தருவது போன்ற அவலங்களை ஆதார பூர்வமாக எடுத்துக் காட்டியதும் சிறுகதையாசிரியர்களின் கூற்றுக்களை வைத்தே அன்றைய, இன்றைய போக்கை அளந்து பார்த்ததும் பொதுப்படையான விதிகளை நிர்ணயிப்பதிலுள்ள கஷ்டங்கள் பற்றி தர்க்க ரீதியாக விளக்கம் தந்ததும்—அவரவர் சிறுகதை இலக்கியம் பற்றி திடமாக தீர்த்து வைத்திருக்கிறர்கள் என்பதை மிகத் தெளிவாகக் காட்டியது பழகிப்போன பெயர்களுக்கப்பால் புதிய பெயர்களை முன்வைக்கும் ஆர்வம் தலை தூக்கினுலும் முழு நிர்ணயிப்புடன் எந்தப் பெயரும் வந்து நிற்காதது கவனத்திற்குரியது. முந்தின கூட்டத்தில் புதுமைப்பித்தன் பற்றிய திருந்திய மதிப்பீடு அவசியம் என்கிற குறிப்பு ஒலித்ததைத் தொடர்ந்து அவரைப்பற்றிய அதிகமான பிரஸ்தாபம் இந்தக் கூட்டத்தில் இருந்தது இயல்பானதுதான். கூட்டத்தை முடித்துவைத்த தி. க. சிவசங்கரன், இலக்கியம் பற்றிய பார்வைகளில் எழுதுபவனுக்கும் சரி, விமர்சிப்பவனுக்கும் சரி—அறிவு பூர்வமான நோக்கும் லோகாயதமான நோக்கும், ஒன்றிலிருந்து மற்ருென்று தொடர்ந்ததாக இருப்பது தவிர்க்கமுடியாதது என்றுர். இந்தத் தொடர் கூட்டங்களின் விசேஷம், ஒரு கூட்டத்துக்கு மற்றொரு கூட்டம். சிலர் கழிந்து வேறு சிலர் கூடினுலும் அடிப்படை உணர்வு அறுமல் பாதுகாக்கப்படுவதுதான்.

நம்து படைப்புகள்

ஆ. ம. ராமச்சந்திரன்

உலகில் அனைத்தும் மாறுதலுக்கு உட்பட்டி ருக்கும்போது மனித குலம் இதற்கு விதிவிலக்கு ஆக முடியுமா என்ற கேள்வி எனக்குள் எழுந்த போது, 'வருங்கால மனிதன்' என்ற தலைப்பில் பேராசிரியர் யாகோவ் ரோகின்ஸ்கி மனிதனது உருவ மாற்றங்கள் குறித்துப் பேசுவோம் என்று கூறிக் கொண்டு ஒரு கட்டுரை வாயிலாக சோவி யத் நாடு இதழில் விளக்கம் கொடுத்தார். அந்த விளக்கம் என் சிந்தனைக்கு விருந்தாகவேயிருந் தது. அக் கட்டுரையில் கண்ட விஷயம் இதுதான். 'நவீன மானிட இயலில் இரண்டு தத்துவங்கள் அர சோச்சுகின்றன நவீன. கற்காலத்திலிருந்து உடல் தோற்றத்தில் ஏற்படும் மாறுதல்களின் வேகம் மேலும் மேலும் குறைவாகி வந்திருக்கிறது என் றும், இன்னும் பல லட்சம் ஆண்டுகளுக்குப் பின் வரப் போகும் நமது சந்ததிகளுக்கும் நமக்கும் அதிக வேறுபாடு இருக்காது என்றும் ஒரு தத்து வம் தெரிவிக்கிறது. மற்றொரு தத்துவம் இதற்கு எதிரிடையானது. இதன்படி நவீன மனிதனது உடற் பரிணும வளர்ச்சி கடந்த காலங்களில் நடந் தது,போலவே இப்பொழுதும் தொடர்ந்து நடை பெற்று வருகிறது .. மனிதக் குரங்கு போன்ற மனிதனின் பரிணுமம் அவனது உடல் தோற்றத் தால் ஏற்பட்ட மாற்றங்களால் பெரு மளவிற்குத் தீர்மானிக்கப் பட்டது. ஆனல். நவீன மனிதனின் பரிணுமம் அவனது உடலியல் மாறுதல்களைச் சார்ந்திருக்க வில்லை.

இயற்கையின் மீது மனிதனது ஆதிபத்தியம் மேலும் மேலும் அதிகரித்து வருகிறது. இனிமேல் அவன் சூழ்நிலைக்கு ஏற்பத் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அவன் செயற் கையான சூழ் நிலைகளை உருவாக்கிக் கொண்டு, இயற்கையின் நிர்ப்பந்தங்களிலிருந்து விடு பட்டுச் சுதந்திரமாக வசிக்கலாம். விஞ்ஞான ரீதியாகக் கூறுவதானல், (1) உயிரியலுக்குரிய மாற்றி அமைத்துக் கொள்ளும் திறன்.

(2) மனிதனின் இயல்பான ஒழுக்கத்திற்குரிய மாற்றி அமைத்துக் கொள்ளும் திறன், என இரு வகையுண்டு என்பதே கருத்து. ஆகவே படைக்கப் படும் இலக்கியம் மக்களை தன் சிந்தனை பற்றிச் இழுத்துச் செல்லகூடிய கொள்கைஅல்லது தத்துவ அடிப்படையில் தான் இலக்கியங்கள் உருவாக முடியும். இபபடித் தத்துவங்களை அடிப்படையா கக் கொண்டுதான் கஸ்டாவ் ப்ளாபார்ட், பால் ஸாக், எமிலி ஜோலா போன்ற சிறப்புத் தன்மை படைத்தவர்கள் இலக்கியங்களைப் படைத்தார் கள்.

ஆனல். தமிழகத்தில் இன்றைய இலக்கியங் களின் நிலை என்ன?

குறிப்பாக சிறு கதைகள், நவீனங்கள் ஒரு சாராரால் அவர்களுக்குரியபிரசார முறையாகவே கருதி எழுதப்பட்டு வருகின்றன. அந்த வகையில் சமூகத்தில் ஏற்கத்தகாத கருத்துக்களை நிலைக்கச் செய்ய சூழ்நிலையே காரணம் என எழுதப் பட்டு வந்தாலும், அத்தகைய பிரபலமாகிவிட்ட எழுத் தாளர்களின் எழுத்துக்கள் வீழ்ச்சியே யடைந் துள்ளன இருப்பினும் சூழ்நிலையை காரணங் காட்டி இன்று இலக்கியம் படைப்பதாகக் கருதிக் கொண்டிருக்கும் திரு. அண்ணுதுரையும். அவரது வாரிசுகளும் சோவியத் பேராசிரியரது விஞ்ஞான கருத்துக்களை சிந்திக்க வேண்டும். இலக்கியத்தில் 'ஆசாரம்' கருதும் பிரிவினரும் சிந்திக்க முயன் ருல் நலமே.

மனித உயிரினம் முக்யத்வமற்ற உடன் விளை வான ஒரு தற்செயல் நிகழ்ச்சி, முக்யத்வம் வாய்ந்தவை என்று பேசப் படுவதெல்லாம் நம் முடைய நினைப்பைப் பொறுத்தது தான். மனிதப் பற்றுக் கோட்பாடுடையோரும், குறிக்கோள்நெறி யாளரும் முக்யத்வம் வாய்ந்தவைகள் உண்மை நிகழ்ச்சி தானே என்ற தன்மையில் கேள்வியினை எழுப்பிக்கொண்டு பிரித்துப் பார்த்த போது, தோல்வியுற்ருர்கள். இதன் விளைவு குழப்பமான சிந்தனை.

எந்த நம்பிக்கைகள் மனிதர்களை நன் னெறியில் வாழச் செய்யும் என்பதை யூகித்துக் கொண்டே, பெரும்பாலும் போலிப் பசப்பூட்டுத் தன்மையில் அந்த நம்பிக்கைகளை உண்மையென நிருபிக்கச் செய்ய சில பெரிய மனிதர்கள் வாதத் தினைப் புனைகிருர்கள். அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டவைகள் செல்லத் தக்கவைகள் தான் என்று தோன்றும் வகையில் வாதங்களை நேர்மை யற்ற முறையில் உண்டாக்கிக் கொள்கிருர்கள். ஆழமாகப் பதிந்து விட்ட தப்பெண்ணெங்கள் மேல் உலகத்தால் அனுப்பப்பட்ட நிறுவனங்கள் என பாசாங்கு செய்கின்றனர். மெய் விளக்கத் துறையை முதன்மையாகக் கொண்டு காரண காரியத் தொடர்புடைய பகுப்பாராய்ச்சியாளர் களான சிந்தாமணிகளோ இவைகளை மறுக்கின் ருர்கள் ஆனல்!...

பொதுவாக நாம் அறிந்திருந்த கருத்து இது தான்: சூழ்நிலைக்கு ஏற்ப மனிதன் எதிர் வினை புரி கிருன்; தூண்டப்பட்ட மனிதன் சம நிலையை ஏற் படுத்தவே செயல் புரிகிருன். அப்படியானல்!... பேராசிரியன் கருத்தை ஒப்பு நோக்குமிடத்து நாம் (இலக்கியம் படைப்போர்) மேற்கொள்ள வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு- சிந்தனை. அதா வது, இன்றைய உலகில் வாழும் மனிதனுக எதை யும் கூர்மையாகப் பார்த்து அனுபவம் பெறு

மனிதனுகயிருந்து கொண்டு இலக்கியம் படைக்க வேண்டிய பொறுப்பு என்பதாம்.

நம்முடைய மனவெழுச்சி முனைப்பற்றது. அதற்கான காரணங்களை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. எப்படியோ அது நம்மீது திணிக்கப்படுகிறது. நாம் அடிமையாகிறோம் அப்படியானல்...!

வாழ்க்கை என்பது என்ன?:-

இயற்கையால் பெறப்படும் அறிவு, தூண்டுகைகள் (இம்பல்ஸ்) ஆசாரங்கள்' மூட நம்பிக்கைகள், மலிவான கருத்துக்கள்- இவைகளின் மோதலே, வாழ்க்கை! சில சமயங்களில் நம்முடைய உணர்வு இல்லாமலே செயல்கள் நடைபெறுகின்றன. இப்படி கிடைப்பதுதான் அனுபவம்.

உண்மைக்கோ ஒழுக்கத்திற்கோ அளவுகோல் கிடையாது.

ஒருவனுக்குரிய தப்பெண்ணங்கள் கண் மூடித்தனமாக முழு மொத்தமாக்கப்படுவதுண்டு. நாம் மற்றவர்களிடம் மட்டுமா போராடுகிறோம். இல்லையே; நமக்குள் நாமே போரிட்டுக் கொள்கிறோம்.

நல்லதும் கெட்டதும் என்ற அறிவுதான் என்ன? மனதின் எழுச்சியால் இன்பமோ, துன்பமோ ஏற்படுகிறது. இந்த விழிப்புணர்ச்சிக்கு சமமாகவே நல்லதும், கெட்டதும் என்ற அறிவு பெறப்படுகிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் உயிர்ச்சக்தியுண்டு. இந்த உயிர்ச்சக்தி அதிகரிக்கும் போது மாறுபாடு ஏற்படுகிறது. இந்த மாறுபாட்டால் ஏற்படும் விழிப்புணர்ச்சியே, மகிழ்ச்சி அமுக்கப்பட்டுவிட்ட உயிர்ச்சக்தியே, துன்பம். எதையும் தெரிந்து கொள்ள முனைவதே விவேகம். இந்த விவேகத்தை அடைய முனைவதுதான் நற்குணம். ஆனல், இன்ப நாட்டமற்ற தன்மை என்பது இயற்கையான வாழ்வில் ஏற்படும் சம நிலையைக் குலைக்க சதி செய்வதாகும்.

இத்தகைய மேன்மையான கருத்துக்களை புரிந்து கொள்ள முடியாதவர்கள்தான் சில நல்ல படைப்புக்களை 'ஆபாசம்' என்று கூறி அச்சுக்கு வராது செய்கின்றனர். சில பிரபல பத்திரிகைகள் இதைத்தான் செய்து வருகின்றன. 'பிரியாணி என்ற சொல் வரக் கூடாது என்பதற்காக, சில கதைகள் மறுக்கப்படுகின்றன. ஆனல் சில பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் சில கதைகள் ஆபாசமாகவே யுள்ளன என்று கூறப்படுவதும் உண்மைதான். எழுதும் ஆசிரியனுக்கும், தெரிந்தெடுக்கும் ஆசிரியனுக்கும் காரண காரிய விஷயங்களில் காணப்படும் அறிவின் குறையே, இதற்குரிய காரணங்கள். 'ரியலிஸம்' என்ற ரீதியில் பால் உணர்ச்சி சம்பந்தப்பட்ட கதை எழுதும் ஆசிரியனுக்கும் 'செக்ஸாலஜி' தெரிந்திருக்க வேண்டியதல்லாமல், சமூகத்தை கூர்ந்து நோக்கி சிந்திக்கத் தெரிய வேண்டும். விஞ்ஞான ரீதியாக அறிவினை பெருதவனல் ஆபாசமான கதைகளையே எழுத முடியும். இத்தகைய குறையைத்தான் இன்றைய தமிழ்ப்பத்திரிகைகளில் காணமுடிகிறது.

எல்லா விருப்பங்களையும் வேருடன் பிடுங்குவது முடியாததும், விரும்பத்தகாததுமாகும் என்பதே தற்கால உளவியல்உணர்த்தும் செய்தி. விருப்பங்களை விட்டு விட்டு பூர்த்தி செய்து கொள்வதன் மூலம் கிடைக்கக்கூடிய தூய்மையான முன்னேற்றமே நம்முடைய சக்திக்குட்பட்டது. இன்ப நாட்டமற்ற தன்மையை விரும்புவோர் இயற்கையாக மனிதருக்கு ஏற்படும் தூண்டுகையினை உள்ளே யிருந்து வேரோடு கிளப்பி, அதன் மூலம் உள்ளத்தைத் தூய்மைப்படுத்த அடிக்கடி முயல்வராயின், இதுவே அந்த நபரை நரம்புத்தளர்ச்சியுற்றவராக்கிவிடும். இத்தகைய கோளா ரோடு எத்தனையோ இளைஞர்கள் புத்தி சுவாதினமற்று இச் சமூகத்தில் உள்ளனர். இத்தகையோரை பாத்திரமாகக்கொண்டு கதை எழுதும் இலக்கிய உணர்வு பெற்றவர்கள் எத்தனைபேர்? இத்தகைய கதைகளைப் படைக்க மனிதனைப் படித்திருக்க வேண்டுமே?

உயந்த அவாவும் தாழ்ந்த அவாவும் இருக்கத் தக்கவைகள். இரண்டுமே அனுபவிக்கத் தக்கவைகள். தூண்டல் மனிதனுக்கு இயற்கையானது. இதைத்தான். நாம் சிற்றின்பத்துறை என்கிறோம், இதை நமது சிற்றிலக்கியங்களும், கம்பராமாயணமும் பறைசாற்றுகின்றனவே இது தான் உண்மையான, இயற்கையான மனித உணர்ச்சி. அது அமுக்கப்பட்டால் மனிதன் நரம்புத் தளர்ச்சியை அடைந்தவன் என்றும், உணர்வை இழந்தவன் என்றும் ஆகி விடுகிருன். இதை விளக்கத் தான் ஜெயகாந்தன் 'படுகுழி' என்ற கதையை எழுதினுர் என்று நம்புகிறேன். அவர் வளரும் எழுத்தாளர். இப்போதுதான் 'நாவல்' எழுத முனைகிருர். ஏற்கனவே கல்கியில் ஒரு நாவல் எழுதி தோல்வியுற்ற போதிலும், இப்போது ஆனந்த விகடனில் திட நம்பிக்கையோடு ''பாரிசுக்குப் போ' என்ற நாவல் எழுதுகிருர். ஐரிஷ்காரான ஜேம் ஜாய்ஸைப் பின்பற்றி எழுத்துதுறையில் சில யுக்திகளை கையாண்டு வெற்றி பெற்ற பிரபல எழுத்தாளர்கள் சிலர் தமிழகத்தில் உண்டு. உரையாடல்கள் மூலம் பாத்திரங்களை வாசகர்கள் முன் கொண்டு வந்து நிறுத்தும் யுக்தியை திறமையாக செய்து வருகிருர், திரு, ஜெயகாந்தன்... ஆனல் இன்று தமழகத்தில் அவரைப்பிடிக்காத சிலர், அவருடைய யுக்தியை மெச்சாமல் தமிழுக்கு இழுக்குத் தேடுவதாகவும்' எழுத்துக் கிறுக்கர் எனவும் கூறுவது வருந்தத்தக்கது. தனக்குத் தகுதியில்லாதவிஷயங்களில் தெரியாத விஷயங்களில் பத்திரிகைகளில் எழுதுவது. தமிழகத்திற்குரிய சிறப்பு இந்த வகையில் 'எழுத்துக் கிறுக்கர்கள்' என பழித்துரைப்பது புரியாத விஷயத்தைப்பற்றி எழுத முனைவதாகும்

பாலினத் தூண்டுகைகளே சொல்ல முடியாத அளவிற்கு உயர்ந்த பண்பாட்டிற்கும், கலைக்கும், ஏன்— சமூகத்தில் மனித உணர்வால் ஏற்பட்டுவிட்ட சாதனைகளுக்கும் அடிப்படையாகி விடுகின்றன.

ஆனால் பிரஞ்சு, ஆங்கில கதைகளைத் திருடி (ஜீரணிக்க முடியாதவர்கள்) பாலினத் தூண்டு கைகளின் அடிப்படையில் அமைந்த கதைகள் என்று சொல்வதால் அதை எழுதும் எழுத்தாளனை ஆசிரியனாக நாடு ஒப்புக் கொள்ளாது. ஆனால், இத்தகைய தூண்டுகையால் நடமாடும் மனிதர்களைப்பற்றி எழுதப்படுவதுதான் கதைகள்.

நாகரீகம்

வாழ்க்கை வாழ்வதற்கே இப்படி வாழ்வதற்காகப் போரிட்டுக்கொண்டு வலியவன் வாழ எளியவன் வீழ்த்தப்பட்ட துண்டு. இப்படி உருவாக்கப்பட்டதுதான் நாகரீகம். தூண்டுகைகளில் நாகரீகம் குறைந்ததும் உண்டு. இதுவும் மனநிறைவு செய்யப்பட வேண்டியவையாயினும், அவைகள் தியாகம் செய்யப் படுகின்றன. இவைகளே மறுபடியும் உண்டு பண்ணிக் கொள்ளப்படுகின்றன. இப்படி ஒவ்வொரு தனி நபரும் ஒரு வரையடுத்து மற்றவராக உறவு கொள்வதே நாகரிகம். அதாவது, பொது நலத்திற்காக இயல்பான உணர்ச்சியைத் தியாகம் செய்வது தொடரப் பட்டு, வளர்க்கப்படுவதுதான், நாகரிகம்.

இயற்கையாகவே மனிதனுக்குரிய குண அம்சம் ஒன்று உண்டு. அவனுக்கு ஏற்காதது அனைத்தும் உண்மையல்ல எனக் கருதுவதுதான் அது. பிறகு அதையொட்டிச் சுலபமாக அதற்கான எதிர் வாதங்களைக் கண்டு பிடிப்பது இப்படிச் சமூகமானது தனக்கு ஏற்காதவைகளை உண்மையல்ல என்று அறிவித்து விடுவது இயல்பாகி விடுகிறது. இந்த நிலையை நாம் தமிழகத்தில் இன்றும் கண்கூடாக கண்டு வருகிறோம்.

இடையறாத உழைப்பின் விளைவாகப் பெறப்படும் ஆராய்ச்சியால் கண்ட உண்மையான நிகழ்ச்சிகளுக்கு முழு ஆதரவு கொடுக்க வேண்டும், தமிழர்கள் ஆகவே சில பத்திரிகைகள் வேண்டாமென்று கூறுபவையனைத்தும் உண்மை யல்லவென கொள்ள முடியுமோ?...

மனிதப் பண்பு:—

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் செயலாற்றும் திறன் உள்ளது இந்த ஆற்றலே முடிவாற்றல் திறனை உருவாக்குகிறது. இந்தத் திறன் ஆக்கும் நெறியோடு ஒன்றி விடுகிறது.

படிமுறை வளர்ச்சியின் ஊக்கம் அர்த்தபுஷ்டியான உள்ளிடை நிகழ்ச்சி. ஒரு உயிரினம் தனக்குள்ளேயே வளர்ந்து முதிர்ச்சி பெறுகிறது. இதற்கும் வெளிச் செவ்வாக்கு உண்டு இருப்பினும் அந்த உயிரினம் வளர்ச்சிக்குரிய எதையும் பெற்றிருத்தல் வேண்டும்; இல்லையெனில் முன்னேற்றத்திற்குரிய எந்த மாற்றமும் பயனற்றுவிடும். இதையே 'உடம்பின விழ்வகம்' என்பது. அதாவது உடலில் ஏற்படக் கூடிய தூண்டுகையால் விளைவது. இதுவே உயிர்ச்சக்தி. இதுதான் இயற்கையான தூண்டுகை, இயற்கை சார்ந்த வாழ்வில் ஆற்றல் கொண்டோரின் போர் இருக்கத்தான் செய்கிறது. இந்த சச்சரவின் மூலமே இயற்கை மனிதப்பண்பை உருவாக்கி விடுகிறது.

ஆனால், மகாபாரத, ராமாயணக் கதைகளில் வரும் கதா பாத்திரங்களைப் படைக்கக் கூடிய சூழ்நிலை இன்று நமக்கு உண்டா? நமது நாடு ஜன நாயக நாடாயிற்றே!... வாழும் சமூகத்திலுள்ள நல்ல பண்புகளை யெல்லாம் ஒரு சேர ஏற்றி வைத்து உருவாக்கிய கதா பாத்திரங்களே காவியத்திற்கு சிந்தன. முனைப்புள்ளவனும், ஆக்குபவனுமே தலைவன். வலுவுள்ளவன், ஆக்கிரமிப்போன்; துணிகர வீரன்; தீவினையஞ்சாதவன். இந்தனையும் கொண்டுவிட்டவன் மனித வரம்பு கடந்த திறமையைச் சார்ந்தவன் (சூபர் மான்) இத்தகைய மனிதனைத்தான் கந்த புராணத்தில் சூர பத்மன வடிவத்தில் காண்கிறோம். இப்போது அச் சூழ்நிலையுண்டோ?...

வார்த்தைகளுக்குரிய ஆற்றலும் மாந்த்ரீகத்துக்கும் இருந்ததால் இரண்டும் ஒன்றாகவே கருதப்பட்ட கால முண்டு. வார்த்தைகள் என்பதே உணர்ச்சியை வெளிக் கொண்டுவருவதுதான். நம்மோடு வாழும் சகாக்களை வசப்படுத்துவதும் இந்த வார்த்தைகளால் தான்!

நாளும் உலகில் எத்தனையோ மாறுதல்!.. தொழிற் புரட்சி நடக்கும் பாரதத்தில் எழுத்தாளர்களுக்குரிய புதுப் போக்கிற்குரிய கருத்துக்களுக்குத்தான் பஞ்சம் உண்டா? இருப்பினும் சஞ்சிகைகள் சலிப்பு ஏற்படுகிறவகையில் ஒரே மாதிரியான கதைகளை வெளியிடுவதேன்? காரணம் இதுதான்: சில பத்திரிகை காரியாலயங்களில் எழுத்தாளர்களால் எழுதி அனுப்பப்படும் கதைகளையும். கட்டுரைகளையும் கவிதைகளையும் படித்து, புதுப் போக்கினைக் கண்டு தெரிந்து எடுக்கத்தக்க திறமை கொண்டோர் உதவியாசிரியர்களாக நியமிக்கப்படவில்லை மற்றொன்று, உதவி ஆசிரியர்கள் கதைகளை, கட்டுரைகளை, கவிதைகளைப் படித்து தெரிந்தெடுப்பதற்கு மட்டும் நியமிக்கப் படாமல் எழுத்தர் வேலைகளுக்கு பயன்படுத்தப் படுகின்றனர். இதனால் அங்கு வரும் கதை, கட்டுரைகளைப் படிப்பதோடு மட்டுமல்லாமல், தளங்கள் அறிவிற்காக, திறமையை வளர்த்துக் கொள்ள பல கதைகள், படிக்கப் போதிய நேரம் உரிமையாளர்களால் அலுவலகங்களில் ஒதுக்கித் தரப்படாமையே அறிவுத் தேக்கத்திற்கான மூல காரணம். வேறு மொழிக் கதைகளை திருடி எழுதப்படும் கதைகளை தெரிந்து கொள்வதற்கும், உதவி ஆசிரியர்களுக்கு போதுமான நேரமில்லை. ஜீரணமாகாது- எழுதப்படும் ஆங்கில அஜீரணக் கதைகளையும் இன்று 'சில பிரபல பத்திரிகைகள் பிரசுரிக்கும்போது, உதவி ஆசிரியர்களின் பரிதாப நிலை வெட்ட வெளிச்சமாகிவிடுகிறது மேல் நாட்டு இலக்கியங்களைப் படிக்கத்தான் வேண்டும். படித்துவிட்டு மறு சிந்தனையின் விளைவாக, புதுக் கருத்தோடு நமது சமூக பிரச்னைகளை மையமாகக் கொண்டு கதைகள் செய்தல் வேண்டும், ஆனால் இன்று பிரபல நாடக ஆசிரியர்கள் (தமிழகத்தில்) தழுவல்களை மூலக் கதாசிரியர்களின் பெயர்களைக்

குறிப்பிடாமலே தங்கள் சாதனையாக கூறி புகழ் தேடிக் கொள்கின்றனர். அவர்கள் சிந்திக்க கற்றுக்கொண்டு(ரிஃப்ளக்டிவ் திங்கிங்)புதியது செய்ய முனைந்தால், அதன் விளைவாக நல்ல நாடகங்களையும், 'நாவல்களையும் படைக்க முடியும். இன்று காண்பதெல்லாம், பெரும்பாலும் தமிழகத்தில் அஜீரணங்களே!

எந்தத் துறையில் நமக்கு முன் மாதிரிகளுக்கு குறைவு! விஞ்ஞான மாயினும், பொருளாதார மாயினும், அரசியலாயினும் இலக்கியமானாலும் முன் மாதிரிகள் எதற்கும் குறையில்லாது இருக்கின்றனவே! அப்படி யிருந்தும் தமிழகத்தில் நவீனங்கள் உருவாக்கப்படாததேன்? காரணம், சிந்திக்க கற்றுக்கொள்ளவில்லை

இலக்கிய மேதை ஜேம்ஸ் ஜாய்ஸை தமிழகத்தில் அறிமுகப்படுத்திய பெருமை திரு புதுமைப் பித்தனுக்கே உரியது. கதையெழுதும் யுக்தியினை மேல்நாட்டு இலக்கியங்களைப் படித்ததன் மூலமே பெற்றாரெனினும் எதையும் தன் மயமாக்கிக் கொண்டு தான் வாழ்ந்த சமூகத்தை கூர்ந்து நோக்கி தான்பெற்ற அனுபவத்தோடு உண்மைகளை வலுவான வார்த்தைகளால் ஆழமாக எழுதினார். எப்படி விஞ்ஞானி அடிப்படையான கணிதம், பௌதிகம், இரசாயனம் கற்று, ஒரு குறிப்பிட்ட துறைக்கான அறிவுகளை கற்றுத் தேர்ந்து, (பல நூல்களை ஆராய்ந்து) புது கண்டுபிடிப்பினை உலகிற்கு அறிவிக்கிறாரோ அதே போல் எழுத்தாளனும் தன்னை விஞ்ஞானியாகக் கருதிக் கொண்டு உழைக்க வேண்டும்.

திரு. ஜெயகாந்தன் எந்த கல்லூரியிலும் படிக்க வில்லை. ஆனால், சிறு கதைக்காக எத்தனை நூல்களை படித்திருக்க வேண்டும், படிக்காமலே சாதனைப்புரிந்து விட்டதாக கூறுவது, ஏமாற்று வித்தை. படிக்காதவன் எழுதுவதாக கூறுவதைப் பெருமையாக கருதப்படின், தரமான இலக்கியங்கள் எந்த நாட்டிலும் படைக்கமுடியாது. எந்தத் துறைக்கும் உழைப்பு வேண்டும். அதே போல் தான் எழுத்து துறைக்கும் கற்பதும், எழுதுவதும் உழைப்பாகும். உழைக்காதவன், சோம்பேறி. அப்படியே சோம்பேறி இலக்கியம்படைப்பதாகச் சொன்னாலும் ஒப்புக்கொள்ள முடியாது.

நமது பாரதத்திலுள்ள ஏனைய மாநிலங்களில் வாழ்ந்த, வாழும் எழுத்தாளர்களைப்பற்றிய அறிவில்லாமலே பலர் தங்களை எழுத்தாளலர்களாக கூறிக் கொள்கிறார்களே! தமிழ் நாட்டிலுள்ள எழுத்தாளர்களுக்கு(ஏனோ தெரியவில்லை) பக்கத்து மாநிலங்களில் வாழும் இலக்கிய கர்த்தாக்கள் தரம் கண்டு புரிந்துகொள்ள முனைவது கசப்பாகிக் கொண்டு வருகிறது. வங்க எழுத்தாளர்களைப்பற்றிய பேச்சை எடுக்கும் போதோ, நமது தமிழ் எழுத்தாளர்களுக்கு முகம் சுண்டி விடுகிறது அவர்களை புரிந்து கொள்ள முனைவதால் நமக்கு எவ்வித நஷ்டமும் ஏற்பட்டு விடாது. மாறாக நமது இலக்கிய படைப்புக்கான செறிவினையே அது பெற்றுத் தரும். வங்க எழுத்தாளர்கள் சிறு கதை, நவீன, நாடக இலக்கியத் துறையில் (சுமாராக ஐம்பது வருடங்களுக்கு நமக்கு முற்பட்டவர்கள்;ராஜாராம் மோகன்ராய் காலத்தில் ஏற்பட்டுவிட்ட மேற்கத்திய கலாச்சார சாயலோடு, ஆங்கில இலக்கிய சாயலும் வங்க இலக்கியத்தில் பதிய ஆரம்பித்துவிட்டது. ஹிரேந்திரநாத் உபாடியா போன்ற கவிஞர்களின் நாடக இலக்கியங்களும், சரத்சந்திரர், பகிம் சந்திரர், மகா கவி ரவிந்திரர், போன்றவர்களின் இலக்கிய சாதனைகளையும் தமிழர்கள் புரிந்துக் கொண்டால் தானே தமிழிலும் நாவல்களையும், நாடகங்களையும் படைக்க முடியும்,

சிறு கதைகளையும், நாவல்களையும் படைத்து விட்டதாக கதைக்கும் எழுத்தாளர்கள் வில்லியங் டன்னுஸி எழுதியுள்ள ' ஒன் ஆர்ம்ஸோல் ஜர்' என்ற கதையினை படித்தால் தங்கள் தோல்வியை ஒப்புக் கொள்வார்களே! 'சோவியத் நாடு' இதழில் பிரசுரிக்கப்படும் கதைகள் எத்தனை கோணங்களில் இன்றைய சோவியத் மக்களின் உண்மை நிலையைப் பிரதிபலிக்கின்றன! ஆனால் நமது பிரபல சஞ்சிகைகளோ அரைத்த மாவையே அரைப்பவர்களுக்கும், ஆங்கில கதைகளைத் திருடி தமிழாக்கம் செய்பவர்களுக்கும் அதிக முக்யத்வம் கொடுக்கின்ற நிலையில் தானே உள்ளது! ஒழுக்கம், பண்பாடு என்ற பசப்புவார்த்தைகளால் சில எழுத்தாளர்கள் அமுக்கப்பட்டு விடுகின்றனர். கட்டுபாட்டிற்குட்பட்ட எதுவும் மீறப்படுகிறது. சில மாதங்களுக்கு முன் உயர்தர போலீஸ் அதிகாரியொரு வரால் 'மெயில் இதழில்' விஜயவாடாவில் விபசாரம் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியாகியது. விலைமகளிர் வாழ்ந்த தெருவில் வாழ்ந்ததால் குடும்ப பெண்களும் வேடிக்கையாக விபசாரத்தைக் கொண்டார்கள் என கட்டுரையாளர் எழுதியிருந்தார். ஒரு சில நேர்மைக்கேடுகள் சட்ட ரீதியாக கட்டுப் படுத்தப்பட்டாலும் சட்டத்தை மீறி செயல்கள் நடைபெறுகின்றன இன்றைய சினிமா உலகம் எத்தனையோ நேர்மைக் கேடுகளை செய்துகொண்டுதான் இருக்கிறது. குறிப்பாக நண்பனின் தங்கையை காதலிப்பதும், அந்த காதலுக்கு நண்பன்உதவுவதும்பண்பாடாக கருதப்படுகிறது ஆனால் உடல் கோளாறு சம்பந்தமாக கணவனால் மனைவிக்கு இன்பத்தை ஈடு செய்ய முடியாத நிலையில் அவள் மற்றவனை விரும்பி, பிணங்கி போவது நமது சமூகத்தில் குறைகேடாக கருதப்படுகிறது. ஆனால், உண்மை நிலைஎன்ன? கணவனோடு இருந்துக்கொண்டு கள்ள நெறி தவறலாம் ஆனால் அவனை நீங்கி ஆண்மகனோடு அவள் வாழ சமூகம் அனுமதிக்கத் தயாராக வில்லை, இங்கு 'கற்பு' என்ற மயக்கமான வார்த்தை உபயோகிப்படுகிறது. 'கர்ப்பத்தடைக்கான கருவிகள்' வந்து விட்ட நிலையில், வாலைக் குமரிகளும் இச்சாதனங்களைப் பயன் படுத்தக் கூடிய வாய்ப்பினை பெற்றுவிட்டபோது 'கற்பிற்கு' எங்கே பொருள் இருக்கிறது? சங்க காலத்தில், இளங்கோ காலத்தில் கற்பிற்கு இருந்த

(இதன் தொடர்ச்சி 155-ம் பக்கம்)

ந்ரகத்திலிருந்து பச்சையம் வரை

இரா. அருள்

1962 ஆம் ஆண்டு ஜூலை எழுத்துவில் 'சிறு காவியம்' என்னும் பாராட்டுக்குறிப்போடு 334 வரிகள் கொண்ட கவிதை ஒன்று வெளி வந்தது. அதுதான் சி. மணியின் 'நரகம்'. இதைப் பற்றியே 'புதுக் கவிதையில் ஒரு மைல் கல்' என்னும் தலையங்கமும் வந்தது

1966 ஆம் ஆண்டு ஏப்ரல் எழுத்துவில் 250 வரிகள் கொண்ட, சி. மணியின் 'பச்சையம்' வந்தது.

நரகத்திற்கும் பச்சையத்திற்கும் இடையே. சி. மணியின் பல சிறு கவிதைகளும் சில நீண்ட கவிதைகளும் எழுத்துவில் பிரசுரமாயின. இந்த இடைவெளி ஏறத்தாழ நான்கு ஆண்டுகளை நிரப்புகிறது. இந்த நான்காண்டுகளில் சி. மணியின் வளர்ச்சியைப்பற்றிய எண்ணம் தோன்றிற்று. உடனே இதைப்பற்றி ஆராய்ந்தால் என்ன என்றும் தோன்றிற்று. இதன் விளைவே இக் கட்டுரை.

சி. மணியின் வளர்ச்சியை ஆராயந்தறிவதற்காக அவரது எல்லா கவிதைகளையும் எடுத்துக் கொள்வது சிரமமான காரியம்; எனவே ஒரு சில கவிதைகளையே எடுத்து ஆராய முடியும் அவைகளையும் சில காரணிகளை அடிப்படையாகக் கொண்டே தேர்ந்தெடுக்க விரும்பினேன்:

(1) ஆராய்ச்சிக்குறிய கவிதைகள் நீண்டவையாக இருக்க வேண்டும்; அப்போதுதான் எண்ணிக்கைக் குறைவை ஈடு கட்ட முடியும்.

(2) இக் கவிதைகள் ஒரே சமயத்தில் எழுதப்பட்டவையாக இல்லாமல் கணிசமான கால இடைவெளி பெற்றவையாக இருக்க வேண்டும். அப்போதுதான் இந்த நான்காண்டு காலத்தில் சி. மணி வளர்ந்தாரா இல்லையா என்பதை ஒழுங்காகத் தீர்மானிக்க முடியும்.

இந்த இரண்டின் அடிப்படையில் மூன்று நீண்ட கவிதைகளைத் தேர்ந்தெடுத்தேன். அவை.

(1) 'நரகம்' 334 வரிகள்- ஜூலை 62,

(2) 'வரும் போகும்' - 343 வரிகள்- நரகத்திற்குப் பிறகு 30 மாதங்கள் கழித்து, ஜனவரி 65.

(3) 'பச்சையம்' - 250 வரிகள்- வரும் போகும் வெளிவந்து 15 மாதங்களுக்குப் பிறகு, ஏப்ரல் 66.

1. நரகம்

தன்மை ஒருமையிலே தலைவன் கூற்றாய் அமைந்தது நரகம். இத் தலைவன் 27 வயதான வாலிபன்; இலக்கியத்தில் ஈடுபாடுடையவன்; மரபுக்கு மதிப்பு கொடுப்பவன்; புற ஒழுக்கத் ஓம்புபவன்; மணமாகாதவன்; முழு வளர்ச்சியுற்ற பாலூக்கத்தைத் திருமண வாயிலாகத் தூய்மைப்படுத்தவோ அல்லது வேறு வழியில் மடை மாற்றம் செய்யவோ முடியாமல், பாலுணர்ச்சியைத் தூண்டிவிடும் சென்னை நகரச் சூழலிலே சிக்கி, தப்பும் வழி பல தேடி, பயனின்றி திரும்பவும் சிக்கித் துன்புறுபவன். இத் துன்ப அனுபவத்தையும் அதிலிருந்து அவன் மீள முயலுவதையும் சொல்வதே இக்கவிதை.

கவிதையின் தொடக்கத்தில் தலைவன் தனிமையில் இருக்கிறான். இலக்கியத்தின் வாயிலாகப் பெற்ற அகத்துறை அறிவுடன், ஆசையோடு நுகர்ந்த இன்பப் புலக்காட்சி இணையும் பொழுது நந்தா விளக்குப் பாலுணர்ச்சியின் நெடுஞ் சூட்டின் தொல்லையை, தலைவன் வேதனைக் குரலில் கூறுகிறான்.

இதிலிருந்து தப்பிக்க வரிசையாகப் பல வழிகளைத் தேடுகிறான் சென்னை நகரத்தெருக்கள், மரீனு கடற்கரை, சினிமா, பஸ், இலக்கியம், ரேடியோ, இறைவன்; படுக்கை.

இவ் வழிகள் எல்லாம் அவனுடைய பாலுணர்ச்சிக்குத் தூண்டல்களாகவே அமைகின்றன. அப்படிக் கிடைக்கின்ற ஒவ்வொரு தூண்டலிலிருந்து விடுபடுவதற்குப் பதிலாக தன் கற்பனைத் திறன் கொண்டு அழகியல் முறையில் நின்று நிதானித்து அனுபவிக்கிறான். அதனால் மனம் விகாரம் அடையும் பொழுது திடுக்கிட்டு கட்டவிழ்ந்த மனத்தை வாரிச் சுருட்டி உள்ளுக்கிழுத்துக் கொண்டு அச்சூழலிருந்து ஓடுகிறான்; ஆனால் அவன் நிழல் அவனைப் பிரிவதில்லை.

இந்நரகத்திலிருந்து நிச்சயமாக விடு பட அவனுக்கு இரண்டு வழிகள் தெரிகின்றன: (1) பெற்றோர் அவனுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும்.

(2) தமிழகம், முழுவதும் தன் மரபை ஒட்டியோ அல்லது மேல் நாட்டுப் பண்பை ஒட்டியோ நடக்க வேண்டும்.

> மரீனு கடற்கரை
> 'லாங் பீச் ஆகாதோ?
> ... ...
> தமிழகம் கீழுமல்ல
> முழுதும் மேலுமல்ல;
> ... ...
> நடுக் கிணற்றில் கிகழ் காலம். (95)

ஆனால் இரண்டு வழியுமின்றி அவன் தந்தளிக்கிறான். அதனால் காமத்தின் மேல் அருவறுப்பு ஏற்படுகிறது. இதை மிக அழுத்தமான முறையில் வெளிப்படுத்துகிறான்:

> காமம்:
> பல நோய் ஒரு மொழி

புற்று சோகை ஈளை
இரத்த அழுத்தம் இன்னுமென்ன
உண்டோ அத்தனை அத்தனையும்
காமத்துள் அடக்கம்.

— 106

4

இறைவனின் புகழ் பாடும் வகையில் இவ்வர்ணனையின் கடைசிப் பகுதி (அவனுக்குத் தெரிந்தோ தெரியாமலோ) அமைந்து விட்டது பிறகு இறைவனைப் புணர்ச்சிக் குறியீடாக உணர்ந்தவுடன், தெளிவாக, நேரடியாக காமத்தை இறைவனோடு ஒப்பிடுகிறான் :

காயெல்லாம் சிவலிங்கம்
கனியெல்லாம் சிவலிங்கம் —243

இறைவனுக்கும் புணர்ச்சிக்கும் உள்ள உறவை அவன் தன் அறிவுக் கண் கொண்டு பார்த்தவுடன் பாலுணர்ச்சியின் வெம்மையும் அதன் விளைவான குற்றச் சிக்கலின் கடுமையும் குறைகின்றன என்றாலும் தன் சூழல் தந்த பாதிப்பின் அழுத்தத்தைத் தாங்க முடியாத நிலையில்.

நரகம்
பெரு நரகம் – 301

என்று வேதனை அடைகிறான்.

எந்த மாறுதலும் கை கொடுக்காமல் இந் நரகத்தையே தொடர்ந்து அனுபவித்தால் என்ன முடிவு கிட்டும் என்று தூரப் பார்வை செலுத்துகிறான்,

பேய்க் காற்று சீறும் போது
மொய் குழல் தொங்கு மலராய்
வீழ்ந் தொழிந் தாக வேண்டும்;
தேய்புரிப் பழங்கயிறு
தாங்கவே தாங்காது. — 330

என்று தன் ஆளுமை முறிவையும்,

காலம் வரும்- அதுவரை
காத்திருந்தால். - 334

என்று தன் வாழ்க்கை முறிவையும் எதிர் நோக்கி முடிக்கிறான்.

2. வரும் போகும்:

இதுவும் தலைவன் கூற்றாகவே அமைந்திருக்கிறது. நரகத் தலைவன் போலல்ல இந்தத் தலைவன். இவன் ஓர் ஆஸ்த்மா நோயாளி; வயதான ஓர் எழுத்தன்; வறுமையில் நலிபவன்; இவனுக்கு நான்கு ஆண்களும் ஐந்து பெண்களும் உண்டு; வாழ்ந்து சலித்தவன்.

இவனை மாலை வேளையில் பஸ் ஸ்டாப்பில் சந்திக்கிறோம். பணி புரிந்து மிகக் களைத்து மனைக்கேக வழி தேடி அத்திப்பூ பஸ்ஸுக்காகக் காத்திருக்கிறான். அங்கே நின்றபடி, புறத்தே,

அம்பாஸிடர் இரட்டைப் பின்னல் ஷவர்லே டெரிலீன் அஜந்தா ஷெரல்ட் பாப் ஸ்கூட்டர் கல்பனு பிளிமத் நைலக்ஸ் 3.5 ஸ்கர்ட் டாக்சி ஞர்தா ஆட்டோ சோளி உலா.

16

லைப் பார்க்கிறான்.

அப்போது, அவனுக்குக்கிட்டாத செல்வம் மங்கை, பெருமை, இளமை, இவைகளின் உறவால் ஏற்பட்ட இன்பம் இவற்றை உணர்கிறான். இவற்றைப் பொருத்தவரை தான் மட்டுமே வஞ்சிக்கப் பட்டவன் என்ற கருத்தும், இவ்வாசைகள் நிறைவேறாது என்ற ஏக்கத்தால் ஏற்பட்ட எதிர்மறை மன வெழுச்சியும் சேர்ந்து அவனை இயற்கைக்கு மாறாகப் பேச வைக்கின்றன. (பகுதி- 11),

வறுமை யேது, இங்கே
இருப்பதெல்லாம் பெருமை தான்.
இன்பம் தான்;

அவனுடன் வளர்ந்த இந்த ஏக்கம் அவனிடத்தில் ஆளுமை முறிவை உண்டாக்குகிறது, நிறைவேறாத ஆசைகளை ஆளுமை முறிவின் இருட்டில் ஃபேன்ஸி என்கிற இடை மனக்கனவில் நிறைவேற்றிக் கொள்கிறான். இப்படி, ஆத்திர மூட்டி ஆசையைத் தூண்ட ஏதுவாக இருக்கும் நனவு நிலைக்கும், ஆசையை நிறை வேற்றும் இடை மன நிலைக்கும் அலைந்தபடி இருக்கிறான்.

இவ்வாறு காலம் கழிய, முன்பு குடித்த காபி கரைய:

வயிற்றில் அடங்கா நெருப்பு
பணப் பை யில் பசியேப்பம்
... ...
அசதி
சாவோடு சதி.

(பகுதி — 32)

இந்த நேரத்தில் பஸ் வந்து சிறிது புத்துணர்ச்சி அளிக்கிறது. பஸ்ஸுக்குள்ளே நெருக்கலும், உலுக்கலும், பேச்சொலியும் டீசலின் நாற்றமும் சேர்ந்து, அவனைக் குமட்டவைக்கின்றன. ஆனால் அந்த நேரத்தில் பக்கத்து மங்கையின் உரசல், பல்லற்ற வாய்க்குக் கரும்பாகப் படுகிறது. உடனே அழிவற்ற ஆசைகளின் நினைப்பு; உடனே அவனுடைய முதுமை, வறுமை, சிறுமை முதலியன பற்றிய நினைப்பு; உடனே

என்னதான் செய்வது?
கனவு
செல்வம் மங்கை பெருமை இளமை ...

(பகுதி— 40)

நரகத் தலைவன் நிகழ் காலத்தையும் எதிர் காலத்தையும் எண்ணுகிறான். இவனோ, இறந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் எண்ணுகிறான். அவன் அனுபவிக்க வேண்டியதைப் பற்றி வேதனைப்பட, இவன் அனுபவிக்க இயலாமை பற்றி ஏங்குகிறான். அவன் பெண்ணைப் பற்றி மட்டும் நினைக்க இவன் பெண்ணோடு செல்வம், இளமை, பெருமை இவற்றைப் பற்றியும் நினைக்கிறான். அவன் எதிர் நோக்கியவைகளில் ஒன்றான ஆளுமை முறிவை இவனிடத்தில் காண்கிறோம்:

இந்தஆளுமை முறிவு திருமணம் ஆகாமல் இருந்தால்ஏற்படும் என அவன் சொன்னான். ஆனால் இங்கோதிருமணம் ஆனபிறகு மன முறிவு ஏற்பட்டுள்ளது. இள வயதில் ஆசை எழுப்பும் மன யெழுச்சி சம்பந்தப்பட்ட சுயக் கட்டுப்பாட்டுப் பயிற்சி மிகுதியால் ஆஸ்த்மா வருகிறது என்பதையும், இவன் ஆஸ்த்மா நோயாளி என்பதையும் பார்க்கும் போது, இவன் ஆளுமை முறிவிற்குக் காரணம் நரகத் தலைவன் நிலை போன்ற ஒன்றே என அறியலாம். அவனுடைய இலக்கியப் பயிற்சி இவனுக்கு இல்லை என்பது தெளிவானாலும், நரகத் தலைவன் போலவே சில இடங்களில் 'குறிப்பாக, பெண்ணைப் பற்றி வரும் போது இவன் பேசுகிறான்:

ஒயிலாக சிகரெட் பற்ற வைத்து
சுருள் சுருளாய் புகை கிளப்பி,
தவளைக்குப் பாம்பின் வாய் விரிப்பாய்
அவள் வியப்பின் விழி விளிப்பை
கடைக் கண்ணில் களித்து ...

[பகுதி- 26]

நரகத் தலைவன் சமுதாய வட்டத்திற்குள் நின்று அதற்குள் வளைய வருகிறான்; ஆனால் இவனோ அதை வெளியில் நின்று எண்ணிப் பார்க்கிறான். அவன் ஓடித்தப்பிக்க முயன்றாலும் அதில் ஓரளவு நனவு நிலையில் இன்பம் காண்கிறான் இவனோ நிறைவேறாத ஆசைகளைக் கண்டு இடை மன நிலையில் கைகூடும் இன்பத்தையும், நனவு நிலையில் வெறுப்புணர்வும் அடைகிறான்.

நரகத் தலைவன் தன் சிக்கலைத்தீர்க்க இரண்டு முடிவுகளைக் கூறுகிறான். ஆனால் இவன் பிரச்னைக்கோ முடிவே இல்லை என்பதை உணர்கிறான்:

இப்பிறவியில் விடிவில்லை .... (பகுதி- 40)
.... புதை குழியில்
இடைவரை அமிழ்ந்துவிட்டேன் .. பகுதி-41
தப்பிக்க முயல முயல
மேலும் ஆழ்கின்றேன் (பகுதி- 44)

3. பச்சையம்:

பச்சையத்தில் கவிதைத் தலைவனாக வருபவன் கவிஞனே. நகரத்தில் மையமாக அமைந்துள்ள பால் உணர்ச்சியையும் 'வரும் போகும்'' கவிதையிலுள்ள 4 பொருள்களில் ஒன்றையும் மீண்டும் எடுத்துக் கொண்டு அதைத் தனி அருவப் பொருளாகவும், தன்னோடு கலந்த நிலையிலும், பிற மனிதனோடு கலந்த நிலையிலும், சமுதாயத்தில் கலந்த நிலையிலும், வரலாற்றுப் பார்வையிலும் பார்க்கிறான்.

கவிஞனின் கடந்தகால இலக்கியப் படைப்பில் 'பச்சை' அல்லது 'பால்' மேலோங்கி நிற்பதைத் திறனாய்வாளர் கூறி அது கவிஞனின் ஒருமைப்பாடுடைய ஆளுமையை அசைத்தபோது எழுந்த மனஎழுச்சி உணர்ச்சிகள் மேலோங்கி நிற்க கவிஞன் தன் ஆத்திரத்தைக் கொட்டிக் கொண்டு கவிதையைத் தொடங்குகிறான். [பகுதி 1]

கவிஞன் உளவியல் தெரிந்தவன். தன் அகவயப்பட்ட செயலான உணர்ச்சி வயப்பட்டு வெறி கொண்ட நிலையில், விழிப்புற்று காரணத்தைக் காண முற்படுகிறான். அகநோக்கு முறையில் தன் உள்ளத்தின் செயல்களைப் பகுத்துப் பார்க்க ஆரம்பிக்கிறான்.

இங்கேதான் காண்கிறோம் நரகத்திற்கும் பச்சையத்திற்கும் உள்ள பெரும் வேறுபாட்டை. இதில் முதன் முதலில் உணர்ச்சி வயப்பட்ட போதிலும் பிறகு விழித்துக் கொண்டு, பார்வையைத் தன்னுள்ளே செலுத்துகிறான். உள்ளம் மூவகையில் செயற்படுகிறது. சிந்தனை, எழுச்சி, முயற்சி [Thinking, Feeling and willing] உள்ளத்தின் இம்மூவகைச் செயல்களாலும், புலக்காட்சிகளாலும் நாம் அறிவையும், அனுபவங்களையும் பெறுகிறோம். இந்த அனுபவங்கள் பொதுவாக ஒரே மாதிரியாக இருந்தபோதிலும், அனுபவ வெளியீடுகள் தனியாள் வேற்றுமையைப் பொறுத்தவை. இதையே கவிஞன் குறிப்பிடுகிறான்.

நீயிழுத்த காற்றணுக்கள்,
நானிழுத்த காற்றணுக்கள்
என்று அனுபவம் பெறுதலையும்
படைக்கின்றேன் பச்சையத்தால்

என்று தனியாள் வேற்றுமையால் நடக்கின்ற அனுபவ வெளியீட்டையும் குறிக்கிறான்.

இங்கு இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். அறிவையும் அனுபவங்களையும் பெறும் செயல்களில் தனியாள் வேற்றுமை இல்லையென்றாலும், அவைகளைப் பெறும் அளவும், பாதிப்பும் நிச்சயமாக அவனது ஆளுமைப் பண்புகளையும், மனப்பான்மைகளையும், உடனடித் தேவைகளையும் இயல்பூக்க மனயெழுச்சித் திருப்திகளையும் சார்ந்துள்ளன. அதோடுமட்டுமின்றி மனச் செயல்களின் போக்கையும், செறிவையும் ஆழத்தையும் பொறுத்துள்ளன. இச்சிக்கலான செய்தியைக் கவிஞன் பல்வேறு இடங்களில் தொட்டுக் காட்டுகிறான்.

காண்பது நோக்கைச் சார்ந்தது,
உண்மை. ஆனால் நம்முள்
ஐந்துக்கு மேலோடி வழி செய்யும்
ஆறுண்டு. ... .
உணர்ச்சிக்கு முதலிடம் தராத
நோக்கு, அறிவியல் நோக்கு
குறிக்கோள் நோக்கு. கவிதைக்குக்
கருப் பொருள் தேடும் நோக்கு...
பாரீஸ் தெருவில்
டூலூஸ் லாட்ரக்.
தடயத் திடையே
ஷெர்லக் ஹோம்ஸ்,
பீர்பால் ஸஹானி.

இதுவரையில் அவன் கூறியது பொதுவாகப் படைப்பாளிக்குப் பொறுத்தமாக இருக்கும். ஆனால் அவன் கூறுகின்ற படைப்பு வகைகள் [2.] தனக்கு உரித்தானவை என்றாலும், அவை

களும் பொதுவானவை என்றே கொள்ள வழி யுண்டு.

அடுத்தது மூன்றும் பகுதி. இதில் 1.1—ல் எழுந்த பிரச்னைக்கு ஒரு காரணம் அல்லது விளக்கம் கூறுகிறுன் கவிஞன். இங்கும் இலக்கியப் படைப்பை ஆராய்கிறுன் இலக்கியம் சமுதாயத்திலிருந்து எழுவது, அதோடு அது தான் எழுகின்ற காலத்தையும், அக்காலப் பிரச்னைகளையும் காட்டும் என்பதை 3:1—ல் குறிப்பிடுகிறுன் பிறகு நடப்பில் நிகழ்வதைக் காட்சிப்படுத்துகிறுன்.

நடப்பில் இருக்கிற பாலுணர்ச்சியின் மிகுதியை [3 2]—ல் விளம்பர வாயிலாகக் காட்டுகிறுன். [3;3]-ல் ஆண் பெண் கவர்ச்சி இயல்பு என்பதையும், அதைக் கவிஞர்கள் பாடித்தான் இருக்கிறுர்கள் என்பதை இலக்கிய மேற்கோள் கொண்டும் காட்டுகிறுன். அதே நேரத்தில் பாலுணர்ச்சி புகக்கூடாத இடங்களில் எல்லாம் நுழைந்து விட்டது என்பதை 3;4ல் காட்டுகிறுன் கடைசியில் 3 5ல் பாலுணர்ச்சியின் இன்றிமையாமையும் அளவையும் பற்றிய சிந்தனையைக் ''கடலில் உப்பு'' படிமத்தின் மூலம் எழுப்புகிறுன்.

நான்காம் பகுதியில், இன்றைய நிலையில் பாலுணர்ச்சி தலைத்தோங்கி நிற்பதின் காரணத்தை ஆராய்கிறுன். அழகியல் போற்றலும், அறிவியல் வளர்ச்சியும், மத உணர்ச்சியினையும் இறைவழிபாட்டினையும்பறித்துவிட்டன என்பதை விளக்கிவிட்டு,

> இறைவனை விட்டபின். மற்றது
> பிறப்பு மர்மம் ஆண் பெண்
> பிணைப்பு மர்மம் ஒன்றுதான்

எனச் சற்று ஆழமாகச் சொல்லிவிட்டு, 4;3லும் 4;3லும் மனிதனின் சலனத்தை பழம் பாடலின் துணைகொண்டு கேலி செய்கிறுன். கேலி என்றுலும் அதில் பரிதாபமும் கலந்திருப்பதாக நான் நினைக்கிறேன். 'What a fall' என்னும் ஷேக்ஸ்பியர் கூற்று நினைவுக்கு வருகிறது.

ஐந்தாம் பகுதியில் பாலுணர்ச்சியை அருவப் பொருளாகப் பாவித்து. அதைத் தன்னிடத்திலும் அதன் பொது இயல்பிலும், வரலாற்று அடிப் படையில் சமூகத்திலும் பகுத்து ஆராய்கிறுன்.

வேறுணர்ச்சிக் கவிதைகளைப் படைப்பதை விட பாலுணர்ச்சிக் கவிதைகளைப் படைப்பது எளிதல்ல. அதனுல் அவன் அப்படிச் செய்வது அதனுடைய விளைவல்ல என்று [5;1ல்] கூறுகிறுன்.

பக்தர்களைப்போல உணர்ச்சிப் பரவசத்தின் அலைத்திலும் பாலின் தோற்றத்தைக் காணவில்லை என்றும். நனவு நிலையிலிருந்து அதன் உண்மை நிலையைக் காண்பதாக அறிவிக்கின்றுன்.

> நான் கல்லும் நாயும் ஒருங்கே
> காண்பவன்; காண்கிறேன்.

நனவு நிலை என்னை ஓட்டத்தில் பகுத்தறியும் செயலின் விளைவே சற்று மிகையான இக்கூற்று என நாம் எடுத்துக் கொள்ளலாம்

5;3 மிகவும் சிக்கலான பிரிவு. தான் விழிப்போடு எதையும் பார்ப்பவன் என்று கூறிய பிறகு தன்னிடத்திலுள்ள பாலுணர்ச்சியைப் பற்றியும் பாலுணர்ச்சிப் படைப்பில் தனக்குள்ள விருப்பத்தைப்பற்றியும் பகுத்தறிந்து கொண்டு செல்கிறுன். பாலுணர்ச்சி அவனிடத்தில் இல்லாமலில்லை, அதை அவன் தேடுவதுமில்லை, ஒதுக்குவதுமில்லை இயற்கைச் சமநிலையில் நிகழும் நிகழ்ச்சியின் அளவே அவனிடத்தில் அது உள்ளது என்பதை,

> சூழும் வெறிநிறப் பூவணியும்,
> தாவரம்; விழிநகர் தோகை
> பூத்தாடக் குழையும் பறவை

என்னும் வரிகளில் அளவிடுகிறுன்.

5 4-ம் சிரமமான பிரிவே. மலர்வனத்தைத் தேனீ காண்பதுபோன்ற மறிவினைச் செயலல்ல தான் இப்படிக் காண்பது என்கிறுன் கவிஞன். ஆறறிவு படைத்த மனிதனின் மூளையில் எல்லாப் புலக்காட்சிகளும் ஐம்புலன் வழியே சென்று பதிந்தபோதிலும் அவனுக்கு சில பொருள்களைப் பற்றிய நனவறிவே இருக்கிறது. ஏனெனில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில புலக்காட்சிகளே அவனது கவனத்தை ஈர்க்கின்றன, கவனஈர்ப்பு அகவயக் காரணிகளை மட்டும் பொறுத்ததல்ல கவர்ச்சி தாக்குசக்தி போன்ற புறவயக் காரணிகளையும் பொறுத்தது. இப்படிப்பட்ட புலக்காட்சிகளில் மிகச் சிறந்தது அலை, அதுபோலவே பாலுணர்ச்சியும்.

5:5 அறிவோடு கவிதைக் கண்ணேடு கருப்பொருள் தேடும் நிலையில் முன் கூறியபடி கவனத்தை ஈர்க்கும் பாலுணர்ச்சியை பகுத்துப் பார்க்கும் வேளையில் சில சமயம் இயல்பூக்கத்தால் உந்தப்பட்டு இடை மன நிலையில் அதன் ஒரு கணக் கவர்ச்சியைச் சுவைப்பதும் உண்டு. இச்சுவையின் பசுமையினையும் பகுத்தலின் வறட்சியையும் ஒப்பு நோக்கி, படுத்தலுக்குக் கிடைத்த பரிசு இது என்று நினைக்கிறுன். தான் கல்லும் நாயும் ஒருங்கே கண்டான் என்று கூறிய கவிஞன் இப்போது இவ்வாறு தன் மனநிலையைப் பார்ப்பது, நம்மையறியாமல் நனவிலி மண்டலத்தில் ஏற்படும பாலூக்கத்தின் பாதிப்பு முழுச் சிந்தனை நிலையில்கூட தலைகாட்டும் என்னும் ஃப்ராட்டின் கருத்தை நினைவூட்டுகிறது. இந்தக் காரணத்தால் தான் பாலுணர்ச்சியின் திடுக்கிடச் செய்யும் ஆற்றலை பல பூரணமாகக் கவிஞன் உணர்கிறுன்.

இப்புதிய உணர்வோடு (5:6 ல்) சமுதாயத்தில் பாலுணர்ச்சியின் நிலையைப் புதிய கோணத்தில் நோக்குகிறுன். பல் வேறு காலத்து மக்கள் இதை எவ்வாறு அணுகினர் என்பதை அறிய ஆவல் எழும்புகிறது. உடனே சங்க காலத்தில் தொடங்கி இடைக்காலத்திற்கு வந்து, தற்காலத்தில் திகைக்கிறுன். இத்திகைப்பிற்குக் காரணமென்ன? சங்க காலத்தவரும் இடைக் காலத்தவரும் இப்பிரச்னையை வழி வகுத்து வென்று விட்டனர். (5 6ல் முதல் பதினுறு வரிகள்.) ஆனுல் இக்காலத்தவர் இயற்கைப் புணர்ச்சிக்கோ அல்லது சிக்கலற்ற செயற்கை புணர்சசிக்கோ வழி வகுக்கவில்லை. இன்று கவிஞன் காண்பது மூன்று: 1 பாலு

ணர்ச்சியின் உண்மை தெரியாத நிலே; (2) அதன் வளர்ச்சியின் விளைவு தெரியாத நிலே: (3) தூண்டலின் விளைவாக நிகழும் துலங்கலின் நினைப்பே இல்லாமல், பாலுணர்ச்சித் தூண்டலேயே குறியாகக் கொண்ட நிலே அது உயிரியில் தேவையான இயல்பூக்கமாக இருந்த போதிலும், மேற் கூறிய மூன்று காரணிகளால், அது தன் இயல்பு நிலே பிறழவும், சமுதாயத்தில் மூன்றும் பகுதியில் வர்ணித்த நிலே ஏற்பட்டுள்ளது. இந்தச் சமுதாயப் பரிணமக் கட்டத்தை மாற்றியிருக்க முடியாது; இப்போது நாம் சிக்கிக் கொண்டாலும், சில தலே முறைகளுக்குப் பிறகு வேறு பார்வை கிட்டிவிடும். அப்போது கூட இந்தப் பாலுணர்ச்சி தன் சிறப்பை இழக்காது. அதற்குக் காரணம்;

மலர் மன விழியிசிது
குளித்துலர் குழல் மிசை
குளிக் கதிர் நிறப் பிரிவு

ஆறும் பகுதியில், ஆளுமைக்கும் படைப்புக்கும் இடையே உறவை ஆராய்கிருன் கவிஞன் (6:1 ல்) ஒரு படைப்பாளியின் படைப்பு, அவனுடைய ஆசாபாசங்களுக்கும் விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற் பட்டது என்று பொதுவான கருத்து நிலவினுலும், கவிஞனும் மனிதன் தான் என்கிருன். தன் ஆளுமையின் பாதிப்பு இல்லாதிருக்க எச்சரிக்கையாக இருந்து, புறவயப பார்வை கொண்டே படைத்தாலும் சில சமயங்களில் அவனது ஆளுமை படைப்பில் தலே காட்டலாம் ஏனெனில்

...... தப்பிப்
பிழைப்பதில்லே கவிஞன் தன் நிழல்

6: 2 ஐ இரண்டு வழியிலே பொருள் கொள்ளலாம்.

ஒன்று படைப்பை முழுமையாகத் தெரிந்து கொள்ள வாசகன் தான் முன்பே ஏற்படுத்திக் கொண்ட கருத்துக்கள் என்கிற கரையை நீங்கி கவிதைக் கடல் நடுவே நிற்க வேண்டும்.

இரண்டு; படைப்பையும், அதிலுள்ள பாலுணர்ச்சியையும் பகுத்துச் சொல்லிக் கொண்டு வந்த முழுச் செய்தியை அவன் அவன் உணர்ந்து முழுமையாகப் பார்க்கக் கூடிய அளவு, ஒரு வாசகன் பார்க்க முடியாது: வேண்டுமானுல் இன்ெனொரு படைப்பாளி பார்க்கலாம்.

இவ் விரண்டு பொருள்களில் இரண்டாவதே சிறந்தது என்று நாம் நம்புகிறேன் காரணம் இது தான் — கவிஞன் இவ்வளவு நேரம் வரையிலும் இப்பிரச்னையை தர்க்க ரீதியாக பகுத்தறிந்து நமக்குக் கொடுத்த போதிலும். அவன் திருப்தி அடைந்ததாகத் தெரியவில்லே. ஏனெனில் (1) இது பல சிக்கல் நிறைந்த பிரச்னே; (2) இதனுடைய எல்லாக் கூறுகளேயும் பூரணமாக வெளிப்படுத்தி யிருப்பதில் அவனுக்கே சந்தேகம் ஏற்பட்டிருக்கலாம்; அல்லது அப்படி வெளிப்படுத்த முடியும் என்பதில் தயக்கம் இருந்திருக்கலாம்; (3) எல்லாவற்றிற்கும் மேலாக, பிறர் எடுத்துச் சொல்லி முழுமையாக உணர்ந்து தெளியக் கூடிய பிரச்னே அல்ல இது.

(தொடரும்)

சந்தம்

தமிழ்நாடன்

நாலுபேர் தோளில்பூமேடை
மேடையில் ஒரு பூரணன்
வீதியின் வழியே பவனி
போனீரோ எனும் வாய்ச் சங்கு
சங்கின் எடுப்பு, எக்காளம் நீட்சி, நிறைவு
அழகிய சந்தம், இனிய ஒரு கவிதை.

பற மேளம் நான்கைந்து
நாட்டுச் சாராயம் குடித்த வெறியில்
கை தன் வயமாக மேளக்குச்சியும் மேளமும்
மின்னலும் வானும் ஆக டண்டன் என்ற
ஓசை முழக்கு
முழக்கின் வெடிப்பு— பெருக்கம், இறச்சல்-
இணக்கம்
இனிய ஒரு சந்தம், அழகிய கவிதை..

பூப்பந்து ஒன்றிரண்டு போகும் வரும்
கணக்கு நோட்டில் அரை வட்டம்
நொடிக்கு ஒரு வானவில்
ஆசை விழிகளாய் அங்கிங்கு அலேயும்
அலேவின் லயம், அழகு, வளேவு, விரைவு
அழகிய சந்தம், இனிய ஒரு கவிதை...

சிவந்த புற்களாய் நீண்ட தீ நாக்கு
பூரணனின் பஞ்சுப் படுக்கை
அழுகையும் மேளமும் பேச்சும் ஈர சரப்பும்
ஆயிரம் கருவிகள் சேர்ந்த இனிய பின்னணி
கீதம்
இடையில் யாப்பிள்ளே நிஷ்டை
நிஷ்டையின் மௌனம்- வேதம்,
விட்டிசைப்பு, எடுப்பு
இனிய ஒரு சந்தம், அழகிய ஒரு கவிதை

சுடர் ஏற்றும் சடங்கு,
சுற்றி வந்து முனு முனுப்பு— ஆனந்த நித்
திரை
எள்ளும் அரிசியாய் எரு மட்டை விறகு
தேன் கூட்டில் நெய் வடிப்பு,
போகாத ஆசை நொடிக் கொருதரம் எழும்ப
சுக்கைத் தட்ட நீண்ட ஒரு கழி
பட்பட் ஒலி உஸ் ரீங்காரம் சுடரின் சலசலப்பு
எழுதல் தடுத்தல் விழுதல் அமைதி பழங்
கதை
எழுதல் தடுத்தல் விழுதல்
அழகிய சந்தம், இனிய ஒரு கவிதை.

தத்துவமும் இலக்கியமும்

கி. ரா.

எந்த ஒரு எழுத்தாளனுடைய எண்ணத்திலிருந்து வெளியிடப் பெறும் எழுத்து, ஆழ்ந்துள்ள வாசகனுடைய அடிப்படையான உணர்ச்சியைத் தூண்டுகிறதோ அந்த எழுத்தாளனே தத்துவ ஞானி என்ற பெயருக்குப் பொருத்தமான எழுத்தாளனாகும் இந்த விஷப் பரீட்சையில் தேறும் எந்த எழுத்தாளனும், அவன் நாவலாசிரியனாயினும், சிறு கதை ஆசிரியனாயினும், வேறு கவிதை, நாடகம், கட்டுரை, எந்தத் துறையில் எழுதுவோனாயிருப்பினும், தத்துவ ஞானியே ஆகும்.

இந்த "தத்துவ ஞானி" என்ற சொல்லின் தெளிவான பொருளைப் பெற்று, பின்னர் இந்த தத்துவ விஞ்ஞானத்தினால் நாம் பெறும் பயனையும் காண்பது பயனுள்ள வேலையாகும் என்று எண்ணுகிறேன்.

தத்துவம் என்றால் என்ன? சொல்லின் பொருளைக் கண்டு, பின்னர் மரபு வழிச் சென்று, பல்வேறு லைகளில், சொல் குறிக்கும் பொருளைப் பெற்று இறுதி முடிவான வாழ்க்கைத் தத்துவத்தைப் பெறுவோம். இந்த வழியே நேர் முகமான, அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள வழியாகும்.

'தத்துவம்' என்ற வழி மொழிச் சொல்லின் இயல்பான, நேரடியான பொருள், "அது நீ" என்று காட்டுவது எவர்? எவராயிருப்பினும், அந்தக் றுவோருடைய சொல்லைக் கொண்டு அவர், 'அது' என்ற சொல் குறிக்கும் பொருளை அறிந்தவர் என்பது பெறப்படுகிறது. அறிந்த ஒருவரே 'அறிஞர்' என்ற பெயருக்குப் பொருத்தமானவர் என்று கூறுவது சரியாகும்.

அறிஞர் கூறும் சொல்லான 'அது நீ' என்ற பதப் பிரயோகம் எந்த சமயத்தில் கூறப் பட்டது என்று நோக்கினால் நம்முடைய நாட்டின் மிகப் புராதன இலக்கியம் என்று கூறத்தக்கவேதகாலத்தில் கூறப்பட்ட சொல்லே 'தத்துவம்' என்ற சொல்லாகும். ஆகையால் தத்துவத்தின் மூலப் பொருளைப் பெற்றுள்ளோம். இனி, தற்காலத்தில் அறிவுச் சொல்லின் பிரயோகத்தைக் கொண்டு, சொல்லின் பொருளைப் பெறுவோம்.

தத்துவத்தின் அடிப்படையைக் கொண்டே நம்முடைய வாழ்க்கையை வாழ்ந்து வருகிறோம், என்று கூற வேண்டும் எப்படி யெனில், சாதாரணமாக வாழ்க்கையை வாழ்வது என்றால் என்ன பொருள் கொள்கிறோம்? வாழ்க்கை என்ற உண்ணல் உறங்கல் இனத்தைப் பெருக்கல் என்ற அடிப்படைத் தேவைகளைப் பெற்று, வாழ்வதையே குறிப்பிடுகிறோம். இந்தத் தேவைகளை எந்த வழியில் பெறுகிறோம்? எந்த வழியில் பெற்றாலும், அந்த வழியை சமுதாயத்தின் பொது இலட்சியங்களுக்கு முரண் இன்றிப் பெற்று வாழ்வோரையே நேர் வழியில் வாழ்வோராக சமுதாயம் ஒப்புக்கொண்டுள்ளது. அந்த நேர் வழியை விட்டு விலகிச் செல்லுவோரை சமுதாயம் கண்டித்து, அப்படிச் செல்லுவோரை எச்சரிக்கை செய்யும் நோக்கத்துடன் பல விதமான சட்டங்களை இயற்றி உள்ளதைக் காணலாம். இந்த விதமான நேர் வாழ்க்கையை வாழ்வதற்குத் துணை செய்யும் எந்தக் கொள்கையையும் "தத்துவம்" என்று குறிப்பிட வேண்டும். இந்த மரபை ஒட்டியே நாமும் 'தத்துவம்' என்ற சொல்லுக்குப் பொருள் கொள்வது பொருத்தமுடைய வழியாகும். எந்த வழி அடிப்படைக் கொள்கைக்கும் 'தத்துவம்' என்று பெயர் காலத்தின் போக்கில் நிலைத்து விட்டதால், அந்த வழியைக் கொண்டே நாமும், இலக்கியத் தத்துவத்தைப் பற்றி ஆராய்வது பொருந்தும்.

இனி இலக்கியத்தின் தன்மையைக் கண்டு இலக்கியத்துக்கும் வாழ்க்கைக்கும் நேர் முகமாய் எந்த விதமான தொடர்பு உண்டு என்பதை விசாரிப்போம்.

நம்முடைய எண்ணத்தின் அடிப்படையான உணர்ச்சிகளைத் தூண்டுவதே இலக்கியம் என்று கண்டோம். ஆகவே, இலக்கியப் படைப்புக்குப் பயன் படும் தாய்ச் சரக்கு உணர்ச்சிகளே யாகும். உணர்ச்சிகளைக் கொண்டு, அறிவு உணர்ச்சிகளை வெளியிட ஒரு கற்பனை நிலையைப் பெறுகிறான் ஆசிரியன். அந்தக் கற்பனை நிலையைக் கதை வடிவாகவோ, கற்பனையே வடிவாய்க் கொண்ட கவிதை உருவிலோ வெளியிடுகிறான். இந்த விதக் கற்பனைக் கதையை எப்படி உருவாக்குகிறான்?

கதை சொல்லும் நடையைப் பற்றிய விவரத்தைச் சற்று நேரம் ஒதுக்கி வைத்து, எந்தக் கதைக்கும் வேண்டிய இன்றியமையாத உறுப்புக்களான கதை நிகழும் காலம், இடம், பொருள் ஏவல், என்ற வற்றைக் கொண்டு சில தெளிவான நிலைகளைப் பெறுவோம்.

என்னுடைய இலக்கியத் தொடர்பு சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியது. அந்த சமயம் நான் விரும்பிப்படித்துச் சுவைத்த நூல்கள் பெருமபாலும், கற்பனைக் கதைகளே யாகும். கற்பனைக் கதைகளை நான் படிக்கும் அந்த சமயத்தில் உண்மையாய் நிகழும் வரலாறாகவே எண்ணிப் படித்து, அந்தக் கதைகளுடைய பாத்திரங்களுடைய இன்ப துன்ப நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு, உணர்ச்சி வசப்பட்டது இன்றும் என்னுடைய நினைவில் பசுமையாய் உள்ளது. ஆதலால் கற்பனைக் கதையை உண்மை வரலாறு என்று ஏற்கும் வகையில் கதை கூறுவதே சிறந்த ஆசிரியனுடைய லட்சணம் என்று கொள

வது சரியாகும். இந்த இலக்கணத்தைக் கொண்டே வாழ்க்கைக்கும் இலக்கியத்துக்கும் உள்ள நேரடியான உறவை நாம் அறியலாம். இந்த உறவின் நிலையைக் கொண்டு, ஓர் ஆசிரியனுடைய இலக்கியத் திறமையை நிர்ணயிப்பது சுலபமாகும். எந்தக் கதையைக் கொண்டு ஒரு ஆசிரியன், வாசகருடைய எண்ணத்தில் மெய்யானுபவத்தை தோற்றுவிக்கிறுனே அந்தக் கதையே சிறந்த படைப்பு என்று ஒப்புக்கொள்ள வேண்டும். கதைப் போக்கும், நடையழகும் ஒரு புறம் இருக்க, கதையைத் தொடர்பு கொண்டுள்ள வாசகனுடைய மெய்யானுபவமே கதையின் தரத்தை நிர்ணயிக்கும் உரைகல் லாகும்.

வாசகருடைய மெய்யானுபவத்தைத் தூண்டும் கதையின் உறுப்பு எது? எந்த ஒரு தனி இயல்பினுல் தூண்டப்பட்டு, வாசகருடைய எண்ணத்தில் கற்பனை என்ற நிலை மறைந்து, மெய்யானுபவம் என்ற உணர்வு உதயமாகிறது?

கதையின் பல் வேறு உறுப்புக்களையும் சீர் தூக்கிப்பார்க்குங்கால், அந்த வெவ்வேறுன உறுப்புக்களின் கூட்டுச் சேர்க்கையின் இறுதி நிலையே அந்த உண்மை உணர்வைத் தூண்டும் தனி இயல்பு என்பதை எவரும் அறியலாம். அந்தத் தனி இயல்பைக் கொண்டே நாம் எந்தக் கதையையும் எடை போட்டுப் பார்ப்பது சாத்தியமாகும்.

தனித்து இயங்கும் ஒரு ஆசிரியன், எல்லா வாசகருடைய எண்ணத்திலும், ஒரே உணர்வை ஒரே அளவுக்குத் தூண்டுவது, சாத்தியமே இல்லை என்று சிலர் வாதாடலாம். அப்படி வாதாடும் ஒருவருடைய எண்ண நிலையைக் கூர்ந்து நோக்கினுல், அந்த நண்பர் கூறும் வாதம் தனிப்பட்ட, எல்லோராலும் ஒப்புக்கொள்ள வழி இல்லாத, வாதம் என்பதை எளிதில் எவரும் அறியலாம். ஏனெனில், எண்ணற்ற வாசகர்களை ஒரே சமயத்தில் கவர்ந்து, அந்த வாசகர்களுடைய அடிப்படை உணர்ச்சிகளைத் தூண்டி உள்ள பெரும் இலக்கிய நூல்களை நாம் இன்றும் படித்துப் பாராட்டி வருகிறேம். இத்தகைய சாகா இலக்கியங்களுடைய வரலாற்றைச் சற்றுக் கூர்ந்து நோக்குவதால், நாம் பெரும் பயன் அடையலாம். ஆகையால் எந்த இலக்கிய நூல், ஒரே சமயத்தில் பல நூறு என்ன பல ஆயிரம் வாசகருடைய எண்ணத்தில், துல்யமான மெய்யுணர்வைத் தோற்றுவிக்கும் ஆற்றல் பெற்றுள்ளதோ அந்த நூலை தலை சிறந்த படைப்பாகும் என்பதில் சந்தேகம் இல்லை.

எந்த ஒரு நூல் இத்தகைய நிலையான மெய்யுணர்வைத் தோற்றுவித்துள்ளது ஒன்று கேட்போருக்காக, சில நூல்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளேன். அத்தகைய பேரிலக்கிய நூல்களே கம்பனுடைய ராமாயணம், காளிதாசருடைய சாகுந்தலம், பவபூதியின் உத்தரராமசரிதை, நம்முடைய காலத்திய பெருங் கவி பாரதியின் கண்ணன் பாட்டு, ஆகியவை. இந்த வரிசையில் சேர்க்கத் தக்க மேல் நாட்டு ஆசிரியருடைய நூல்களையும் குறிப்பிடுவது அவசியமாகும். மேல் நாட்டுப் பண்பாட்டுக்கும், நம்முடைய நாட்டுப் பண்பாட்டுக்கும் இடையே காணப்படும் அடிப்படை வேற்றுமையை மறந்து நோக்கினுல், ஷேக்ஸ்பியருடைய மாக்பெத், கிங்-லீர்; டெம்பஸ்ட், ஆகிய நாடகங்களும், சார்லஸ் டிக்கன்ஸ் எழுதிய டேவிட் காப்பர் ஃபீல்டு, இரு நகரக் கதை, ருஷ்யப் பேரறிஞர் லியோ டால்ஸ்டாயின் அன்னு கறீனிஞ, ரிஸரக்ஷன், பிரஞ்சுப் பேராசிரியர் அனடோல் பிரான்ஸ் எழுதி உள்ள எல்லா நாவல்களும், மேலே கூறிய இலக்கியப் படைப்பின் பெரும் மதிப்பைப் பெற்றுள்ளவையே யாகும்.

இத்தகைய பேரறிஞருடைய படைப்புத் திறமை எங்கே உள்ளது.

நிலையாய் உள்ள வாழ்க்கை லட்சியங்களுடைய விமர்சனமே மேலே யாவும் மேலேகூறப்பட்டுள்ள இலக்கிய நூல்கள் என்று கூறுவது சரியாகும்: வாழ்க்கையை வாழ்வதற்குத் துணை செய்யும் அடிப்படைத் தத்துவங்கள் என்ற குறிப்பிட்ட மெய்யுணர்வைத் தூண்டும். கருத்துக் கொண்டுள்ள இலக்கியப் படைப்பே நெடுங்காலத்துக்கு. எத்தனை முறை படித்தாலும் மெய்யான தனி இயல்பைக் கொண்டு, வாசகருடைய எண்ணத்தில் அடிப்படை தத்துவத்தைக் கூட்டி வைக்கும் பேராற்றலைப் பெற்றுள்ளவை என்று கண்டோம். இனி எந்தக்காலத்துக்கும் உண்மையான தத்துவ நிலையைக் கூட்டி வைக்கும் இயல்பு எந்த விதம்உருவாகிறது என்று ஆசிரியருடைய நிலையைக் கொண்டு சற்று நுணுகி ஆராய்வோம்.

எந்தக் காலத்துக்கும் நிலை பெற்றுள்ள மெய்யுணர்வைக் காட்டும் இலக்கியத்தைப் படைக்கும் ஆசிரியனுடைய எண்ண நிலை எவ்வாறு இருக்கும்? எண்ணத்தின் தத்துவ நிலையைக் கொண்டே எந்த ஆசிரியனும் தன்னுடைய கற்பனை வடிவத்தைச் சமைப்பது சாத்தியம். ஆகையால் ஆசிரியனுடைய எண்ணத்தின் தன்மை. அந்த எண்ணத்தின் அடிப்படையில் ஆசிரியனுடைய வாழ்க்கையை வாழும் நிலை; இந்த இருவித நிலைகளைக் கொண்டே அந்த ஆசிரியனுடைய கற்பனை ஓட்டம் இயங்குவது இயல்பு. அந்த விதம் நோக்குங்கால். எந்த ஆசிரியனுயினும், ஆசிரியனுடைய எண்ண நிலையைப் பொறுத்தே அந்த ஆசிரியனுடையஇலக்கியப் படைப்பு அமைவதுஇன்றியமையாதஒரு நிலையாகும்,வாழ்க்கையைவாழும்சமயம் அந்த ஆசிரியன் எந்த தத்துவத்தின் அடிப்படையைக் கொண்டு, வாழ்கிறுனே அந்த தத்துவத்தின் அடிப்படையிலேயேதான் அந்த ஆசிரியனுடைய இலக்கிய நூல் படைக்கப் பெறுகிறது என்ற உண்மையைப் பெற்றுள்ளோம், ஆகவே, ஆசிரியனுடையவாழ்க்கைத் தத்துவமே இலக்கியமாய்ப் பரிணமிக்கிறது என்று கூறுவது சரியாகும்.

இந்த விதம் தத்துவப் பேரிலட்சியங்களை அடிப்படையாய்க் கொண்டவையே மேலே நாம் குறிப்பிட்டுள்ள உலக மேதைகளின் படைப்பு

கள் யாவும். இந்தப் பெரும் தத்துவ ஞானிகளைப் போலவே எல்லா இலக்கிய ஆசிரியர்களும் வாழ்வது சாத்தியம் இல்லை என்பதை நான் அறிவேன். ஆதலால் இன்றைய உலகச் சூழ்நிலையில், மேற்கண்ட இலக்கிய மேதைகளுடைய படைப்புக்குச் சமமான இலக்கியத்தைக் காண வில்லை என்று கூறுவது சரியே யாகும். இருப்பினும், மேலே கண்ட நூலாசியருடைய மேனியை அறிந்து ஒவ்வொரு எழுத்தாளனும் அந்த இலட்சியத்தை நாமும் அடைய வேண்டும் என்ற குறிக் கோளுடன் எழுதத் தொடங்குவது சாத்தியம் என்றே நான் எண்ணுகிறேன்.

என்னுடைய இந்த சிறு ஆராய்ச்சிக் கட்டுரையின் நோக்கம், நம்முடைய நாட்டுப் பண்டைய பெருமைக்குக் காரணமான பேரிலக்கியங்களை நம்முடைய எழுத்தாள நண்பர்கள் முடிந்த அளவில் படித்துப் பயன் பெற வேண்டும் என்பதே யாகும். இந்த சிறு வேண்டுகோளுடன் இந்த தத்துவ விமர்சனக் கட்டுரையை மூடிக்கிறேன்.

பாஸ்ஃபரசம்

எஸ். வைதீஸ்வரன்

விதி வாங்கலையோ விதி- தலை
விதி வாங்கலையோ .. விதி...

தாடிக்குள் திருட்டு வழி பட படக்க
ஆடி நடக்கிறது ஞானி.
சங்கிலிச் சுமையறியாக் கொழுங்காளையொன்று
பழத் தோலில் கால் வைத்து கிழத்தோளில் சாய்ந்து விழ

ஏம்பா... கண்ணு தெரியலியா?

கிழம் மறைந்தது கீழ்த்திசைக்குள்
முழங்கை மண்ணுதறி முண்டியெழுந்த காளைக்கு
வளைக்குலுங்கல் மெல்லிசையாய் ஒத்தடமாய்
சிலு சிலுக்க, காளை விழுந்தது மேலும்.
யார் அந்த சாரீரி– நான் இதோ பிரும்மச்சாரி
எங்கே அவள் எங்கென்று எட்டுத்திசைக் கடலிலும்
வலை போட்டு இரை தேட பட்ட பாடு ஓர் பாரதம்!

அட. இது எதிர் வீட்டு...
மீன் வழுக்கி. கதவிருட்டுள் குதித் தோட
இரண்டு மின் விஞடிக்குள் முக்கால் முகத்தை
அரைக்கண்ணால், அவசரத்தால், குறையரையாய்
விழுங்கி வீடு சேர்ந்து இரவின் இருட்டறையில்
கற்பனை யமிலத்தால் 'கண் விசை'ப்படத்தை
கழுவித் தெளிவாக்கிப் பல மடங்கு நீட்டிப் பார்த்து

முழு நிலவே, மோகனமே யென்று கனவு பூசி
மண வறையில் மாட்டி மாலை யிட்டு
வடிந்தது, தவித்த காலை.
மூன்றே நாள் .....
நெஞ்சில் மரமாகப் பரிணமித்த காதற்பூரம்பு
நினைவைக் கடித்து உடம்பை விழுங்கி
துயிலரிக்கும் புழுக்களாய்
கட்டிலில் கிடந்து ஊர்ந்தது.
காளை தவித்தபோது கதவு தட்ட,
திறந்து பார்க்க, ஞானி இருட்டில் நின்றது
'தரகன் நான், குருடன் இல்லை . . .
வா.. வா . டா என்றது காளை, போ...போனுன்...
கண் மூடித் திறக்குமுன் கருக்கிருட்டில் முடிச்சுப் போட்டு
கர்தலுக்கு மங்களம்பாடி சிரகச்சார நுகத்தடிக்கு
இளங்கழுத்து சுமை தாங்கி ஆச்சு.
இருளின் ஈரச்சதுப்பில் எண்ணங்கள் வழுங்கி
அன்பு புயலாகி, ஈருயிரும் ஒருடலுள் பதுங்கி
ஆரு துயரை பயிரறுத்து வேம்பே வேம்பே என்று
தன் தனக்குள் கசந்தது கணக்குப் பார்த்து.
குன்று குன்ருய் தூளிகள் கூடத்தில் மோதியாட
எங்கு வந்தாய், ஏன் பிறந்தாய்? பாட்டாகி
காளை முதுகை கடன் காக்கை கொத்தியது.
ஆனுலும்–
கட்டறுக்க.. கோழையா? [இல்லை . இல்லை...
முதுகை உதறி யெழுந்த காளையை
வளை நொறுங்கல் இளம் விசும்பால் தாக்கி
வைரம் .. வைரம் என்று குடைந்தது.
காளையோ மூச்சிழக்காமல் நாளை
நாளை யென்று வாலடித்து
சங்கிலிக் கழுத்தின் மணிச் சுகம் காட்டி
சக்கரத்தை நுரையொழுக இழுக்கிறது தினமும்

பிணைக்கும் நப்பாசை சங்கிலி
நடுப்பகலில் நூலாய் மெலிந்து
இவ்விடையில் எரி பொன்னாய் மின்னி
ஈருயிரை ஏமாற்றும் பாஸ்ஃபரஸின் பந்ததி
விதி... வாங்கலியோ... விதி— தலை
விதி... வாங்கலியோ... விதி ..

(146-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருள் இன்றைக்கும் பொருந்துமா? முறைப் படி மணந்துகொண்ட ஒருவன் ஒருத்தி துரோகச் சிந்தையின்றி வாழ்வது தானே கற்பு எனப்படுவது! அவள் மணமுடிக்குமுன் எப்படியிருந்தாள் என்று துருவிப் பார்ப்பதால், யாருக்கு என்ன பயன்? ஆண்களுடைய அயோக்கியதனத்தைத் தானே இச்சமூகம் கண்டிக்க வேண்டும் இந்த மயக்கத்திற்கு காரணம் இதுதான்: நமது தமிழ ஐரோப்பிய நாடுகளைப் போன்றோ, வட நாடு போன்றோ போராலோ, சமுதாயக் கலவரங்களாலோ (இந்து—முஸ்லீம் கலவரம்) பாதிக்கப் படவில்லை. தமிழர்கள் இந்த விஷயங்களில் பாக்கியசாலிகள்தான், வட இந்தியப் பெண்கள் போல் கலவரங்களால் கற்பை பறி கொடுத்திருப்பின இப்போது காணப்படும் போலியான பண்புகள் திரைப்படங்களில் காட்டப்படுவது மாய்ந்திருக்கும். கல்லாயினும் புருஷன் புல்லாகினும் புருஷன் என்ற ர்தியில் உணர்வை இழந்தவனோடு கள்ளத்தனமாக வாழ்வதை மறைமுகமாக ஆதரிக்க நினைப்பதை புரட்சிகரமான எழுத்துக்கள் என்ற இழிவான நிலை ஒழிக்கப்பட்டு, விஞ்ஞான ரீதியாக மனிதர்களையும், சமுதாயத்தை பற்றியை பூரண அறிவும் பெற்ற தரமான எழுத்துக்களை நாடு ஆதரிக்க வேண்டும் மனிதனின் இயல்பான ஒழுக்கத்திற்குரிய மாற்றி அமைத்துக்கொள்ளும் திறன் இன்றைய சமூதாயம் என்பதை எழுத்தாளன் புரிந்துக்கொள்ள வேண்டும். அப்போது தான் போலித்தன்மையை அடிப்படையாகக் கொண்ட இலக்கியம் படைக்கப்படும். ஆகவே தத்துவ அடிப்படையில் எழுதினால்தானே இலக்கியங்கள் உருவாகும்? .. திறமை கொண்டோரை எத்தனைக் காலம்முழுக்கிவைக்க முடியும்? ..

தமிழக எழுத்தாளர்களுக்கு உலகப்பரிசு கிடைக்கவில்லையென ஒரு குறையிருப்பதாக அறிகிறேன்!... இது மிகப் பெரிய குறை! எப்படி கிடைக்கும்?

அமெரிக்க நாட்டில் சிறுகதை இலக்கியத்தில் ஆராய்ச்சி நடக்கிறது. இங்கு என்ன நடக்கிறது?

அகில உலகப் பரிசு கிடைக்கவில்லையே என்று வருந்தும்தமிழ் எழுத்தாளர்களை நான் வேண்டிக் கொள்வதுஇது தான்'- "சமூகத்தில் எதுவும் நிலையானது அன்று. ஒவ்வொன்றும் பொறுமையானஅசைவிலேயே தூக்கிச் செல்லப்படுகின்றன' என்றஎமிலிஜோலாவின்கூற்றுக்கிணங்க சமூகத்தைப் பார்க்க தெரிந்து கொள்ளுங்கள். மேலும், கஸ்டாவ் ப்ளாபார்ட், பால்ஸாக், கான் கார்ட். ஜோலா, டால்ஸ்டாய், டாஸ்டவ்ஸ் போன்ற மேதைகளில் இலக்கியப் படைப்புகளை அது என்னவென்று தெரிந்துகொள்வதாவது மறுபடியும், மறுபடியும் படிக்கவேண்டும். மனிதர்களைப் படித்துசமூகத்தை புரிந்துக் கொண்டால் நிச்சயமாக தமிழுக்கு அகில உலகப் பரிசுகிடைக்கும். இரண்டாவது பிரிவில்இத்தகைய கர்த்தாக்களை வாசகர்கள் முன் நிறுத்துகிறேன்.

ஓயாத பசி

த.நா. ஸ்ரீகாந்தன்

வயிற்றுக்குள்ளே முடங்கிக் கிடந்த சிசுக்கு
உலகப் பார்வைப் பசி

உருண்டு புரண்டு உதைத்து வெளி வந்தும்
அதன் வயிற்றுக்கே பசி

பாலை முட்டக் குடித்து உணவைத் தின்று
தட்டுத்தடுமாறி தவழ்ந்து நடைப்பழயும்
அழகுக்கும் அறிவுக்குமாய்ப் பசி

ஆடையாய் அணியாய்ப் பூண்டு
திண்ணை முடித்து பள்ளி முடித்து
காலத்தைக் கரைத்தும் மேனியிலேபசி
மணம் முடித்து பிள்ளை குட்டி எடுத்தும் பசி
ஓயவில்லை

ஆடி அடங்கி மூப்பும் நரையும் சூழ்ந்தும்
ஊன்று கோல் ஊனி நால்வர் தோளேறி
பெரும் பசி எடுத்து
நெருப்பைத்தின்று புகையாய் மாறி- ...

பின் பசி ஓய்ந்ததா தெரியவில்லை!

வேள்வி

எழில் முதல்வன்

கி
யூ
வி
லே

ஒரே கூட்டம்!
'கியூ' எலியின் வால் போலே நீண்டு கிடந்தது!

இரையுண்ட பாம்பாய்
புரண்டு நெளிந்து
ஒடிந்துஒடிந்து
நெளிந்து
வளைந்து
'பஸ் பூதத்தின்' வாயில் விழுந்தது!
நெருப்பு வெயில்
மண்டையைப் பிளந்தது,
'ஆபீஸ் கடவுளை' அடைய
'மிடில் கிளாஸ்' முனிவர்கள்
இயற்றும் வேள்விதான் இந்தக் 'கியூவோ'?.

பிச்சமூர்த்தியின் இலக்கிய ஸ்தானம்

தர்மூ. சிவராமூ

விமர்சகனின் வேலை சிலசமயங்களில் ஒரு சமயத்தின் தேவை அழுத்தத்தினுல் பாதிக்கப்படுவதுண்டு. முக்கியமாக நிராகரிக்கப்படும் அல்லது கவனிக்கப்படாத ஆசிரியனின் நூல் வெளியிடப்படும்போது விமர்சனம் பிரசார முனை ஒன்றையும் ஏற்கிறது. சில சமயங்களில் இந்த முனைக்கே வேகம் ஏறி இருக்கவும் கூடும். அப்போது அவனது அப்ஜெக்டிவ் நிலை—பிரதியேகமான சார்புகளற்ற நிலை— தளும்பக்கூடும்: தளும்புவதாகத் தென்படக்கூடும் இச்சமயத்தில் வாசகர் விமர்சகனின் அடிப்படை அளவைகள் எத்தகைய நூல்களை பவித்திரப் படுத்துகின்றன என்று ஓரளவு ஊகிக்கவேண்டும். ஏனெனில் (இதுமுக்கியம்) கதாசிரியனைப்போலவேவிமர்சகனும்அருட்சிவசப்பட்டாலும், எத்தனையோ வகையான தேவைகளால் உந்தப்பட்டு எழுதுகிறுன். ஆகவே, தான் சொல்ல விரும்பிய சில தாக்கான விஷயங்கள் சொல்லப்படாமல், அவனோடு மறையக் கூடும். இத்தகைய சமயத்தில்தான் வாசகன் விமர்சகனின் அடிப்படை மதிப்புகளைப் புரட்டிப்பார்த்து அவன் இன்னுரைப் பற்றி இப்படித்தான் கருத்துக் கொண்டிருக்க முடியும் என்று ஊகிக்கவேணும்.

சில விஷயங்களை விமர்சகன் 'இது ஏற்ற சமயமல்ல' என்று சொல்லாமல் விடுவதுண்டு எனது குறிப்பான ஒரு கட்டுரை (மௌனி நினைவுகள்) எழுதப்பட்டும் பிரசுரமாகாது இருப்பதின் காரணம் இதுதான். கதாசிரியனுக்கு நேராத ஒரு நிலைமை இது—ஏனெனில் விமர்சகன் எழுத்தாளர்களின் கௌரவத்தை ஸ்தாபிக்க கடமைப்பட்டவன். முதலில் தரமான எழுத்தாளர்களின் இலக்கியத் தரத்தை நிரூபிப்பது தமிழ் விமர்சகர்களின் கடமை இன்றைக்கு. அதன்பிறகே நாம் ஆழமான பாபகுாடுகளை விசாரிக்கவேணும். கலைப் படைப்பின் முக்கிய உந்துதல் நமது வசத்துக்குள் படாத உள்ளுணர்வில் பிறப்பது.அதை மேலோட்ட அறிவு நிதானித்து திட்டப்படுத்தி இந்த வேலைக்கு இது ஆகாது என்று இடம், பொருள், ஏவல் பார்த்து வெளியிடமுடியாது. ஆனுல் விமர்சனமோ அருட்சிவசப்பட்டாலும் முதன்மையாக அறிவு பூர்வமானது (இன்டலக்சுவலானது). அது இடம், பொருள், ஏவல் பார்க்கும். மறைக்கும் தேவையென்று பட்டால் கொஞ்சம் கூடின அழுத்தம் கொடுக்கும்.

'மௌனி நினைவுகள்'ளில் பிற எழுத்தாளர்களின் (அல்லது முக்கியமாக ஒரு மேஜர் எழுத்தாளரின்) வாழ்க்கைப் பார்வைபற்றிய சில கருத்துக்களை மௌனியைச் சாக்காக்கி சொல்ல நேர்ந்திருக்கிறது. ஆசிரியர் அதை இப்ப பிரசுரித்தால் வாசகர்களைக் குழப்பலாம் என்று ஒதுக்கி வைத்திருக்கிருர். இது உண்மையில் பொறுப்புள்ள மனப்பான்மையின் விளைவுதான். ஏனெனில் நமது சூழல் அப்படி: இன்றைய கட்சிகள் இலக்கியாசிரியர்கள், காளான் எழுத்தாளர்கள் என்னும்இரண்டுதான், மணிக்கொடி, நிழலில் நின்ற கோஷ்டியைப் பற்றி வேபறுரிடத்தில் (கல்தீபம்-எழுத்து' எண் 60) சொன்னதை வாசகர் கவனிக்க வேண்டும். அவர்களது பார்வை வேறுபாடுகள் ஒவ்வொன்றும் அவர்களைத் தனித்தனியே ஒவ்வொரு கட்சிகளாக்கிவிடும். ஏன் இன்று முன்னிற்கும் நமது முக்கிய விமர்சகர்களான க. நா. சு.சி.சு. செ இடையே எவ்வளது வித்யாசம் கண்டிருக்கிறோம். இவர்களுடன் சிதம்பர ரகுநாதன்' தி.க. சிவசங்கரன் ஆகியோரை ஒப்பிட்டால் அவர்கள் தனிக் கட்சி. இந்த வேறுபாடுகள் ஆழமானவை காளான் எழுத்தாளனுக்கும் இலக்கியாசிரியருக்குமிடையே வித்தியாசம் காணமுடியாத சூழலில் இந்த ஆழமான பாகுபாட்டைப்பற்றி விமர்சகன் அதிகம் பொருட்படுத்திப்பேசநேரமில்லை, அதோடு பொருத்தமுமில்லை. பொது வாசகனை, விளக்கம் தேவைப்படுபவனை குழப்பவும் கூடும்.

இதற்குள் வாசகர் மேற்படி வரிகளை எழுதத் தூண்டியது எது என ஊகித்திருக்கலாம். டி.கே. துரைஸ்வாமியின் 'தற்கால தமிழ் இலக்கியம்' மில் சில வரிகள்தான். மேலே சொன்னவை போதும் ஒரு சமாதானத்துக்கு என நினைகிறேன். 'முடிவுகள்' எதையும் புதுசாகச் சொல்லவோ பழைய 'முடிவுகளை' நிராகரிக்கவோ இப்ப நான் முயற்சிக்காவிட்டால் அதுக்கும் காரணம் மேலே சொன்னவைதான். —ஆனுல் ஒன்று சி.சு.செ. யின் பெர்ஸனுலிடிபோலவே மௌனியினுடையதையும் ந. பிச்சமூர்த்தியினுடையதையும் பற்றி எழுதியிருக்கிறேன். அதுக்கெல்லாம் ஒரு ஸ்தானம் பிரசார விமர்சனத்திலும் எழுத்தாளனை 'ஸ்டார்°' ஆகக் காணும் மனப்பான்மையிலும் இருக்கவே செய்கிறது. அந்த அம்சம் எவ்விதத்திலும் ஒரு அணிப்பொருள் ஸ்தானத்தை மீறினதல்ல அத்தகைய கட்டுரையில்

ரசிகனுக நான் சி.சு.செ.யின் பழமை விரும்பும் பார்வையைசகித்துக்கொள்கிறேன் ந. பிச்சமூர்த்தியின் தத்துவச் சரடையும் அனுமதிக்கிறேன். தனி ஆளாக இவைஎனக்கு உகப்பதில்லை. மௌனியின் கேள்விமயமான விசாரப் பொருட்கிடையே எனக்கு கவர்ச்சி! இதுக்கும் மேல் புதுமைப் பித்தனின் நரம்பு லோகம். இந்த நிலையில் சி.சு.செ. என்னை ஒரு ஸ்தாபனமாக ஆகர்ஷித்திருக்க முடியாது. இலக்கிய பிரக்ஞையில்தான்

சி.சு.செ.யும் ந.பிச்சமூர்த்தியும் என்னைப் பொறுத்தவரை பெறும் ஸ்தானம் லா.ச. ராமாம்ருதத்தின் உணர்ச்சிகள் குடும்பக் கட்டுக்குள் உலவுவதை நான் என் பார்வையில் 'ஹிப்போகிரிஸி' (உள்ளுக்கு வெளிமுரண்) என்பேன். ஆனால் அவரது கலை: இவை சில முக்கியமான சிலவேளைகுறிப்பிடத் தேவையற்ற அந்தரங்கங்கள். இதுபோல் என் கட்டுரைகளில் நான் ரஸித்ததுக்கும் என் தனி மனிதப்பார்வைக்கும் இடையே உள்ள மோதல் எத்தனையோ. அவற்றை நான் தத்துவார்த்தமாக மட்டுமே பொதுட்படுத்துகிறேன். இலக்கிய பூர்வமாக அவை கலைப் பொருள்கள் மட்டுமே.

இந்த நிலையில் மௌனியும் புதுனமப்பித்தனும் பூரணமாகக் கையாளாத கவிதையுருவைக் கையாண்டு தன் வாழ்க்கைப் பார்வையை முழுதும் வெளியிட்ட ஒரு கணிசமான சாதனைக்காகத் தான் முதன்மையாக நான் ந. பிச்சமூர்த்தியை மேஜர் பொயட் ஆகக் கருதுகிறேன். வீ ச் சு அகண்ட கவி இயக்கம் ந பி. யினுடையது.நீண்ட கால இயக்க வசதி வேறு: இந்நிலையோடு புதுக் கவிதை முதல்வர் என்ற முன்னோடி ஸ்தானம் இவை அவருக்கு 'காட்டு வாத்து' பற்றி டி.கே.து குறிப்பிடும் சோடையை மீறியே ஒருமேஜர் ஸ்தானத்தை அளிக்கப்போதுமானது என அபிப்ராயப் படுகிறேன். மற்ற என் வாதநியாயங்கள் ந பி. பற்றி தாக்கப்படவில்லை, ஏதும் அது பற்றிச் சொல்ல...

பிச்சமூர்த்தியை ஒரு 'மேஜர் பொயட்'எனும் போது அவரது இயக்க காலத்தையும் அவதானிக்க வேண்டும்.—இக்கட்டுரைக்கு ஏற்றுக் கொண்டு நான் கூறுபவை பிற இடங்களில் செய்துள்ள 'ஆய்வு' முறையில் வருபவை அல்ல. ஓரளவு சரித்திர பூர்வமானவை மேலோட்டமான ஒப்பீட்டு முறையில் கிடைப்பவை—டி கே து. பிச்சமூர்த்தியின் காட்டுவாத்துவை மட்டும் கொண்டே நான் அவரை மேஜர் பொய்ட் எனக் கூறுவதாக நினைக்கிறரோ என அவர்வரிகள் சந்தேகிக்க வைக்கின்றன. பொத்தம் பொதுவாக பார்க்கையிலோ காட்டு வாத்து டி.கே.து. கூறுவதுபோல் மிக உயர்ந்த ஒரு படைப்பல்ல என்று நாம் ஒப்புக்கொள்ளுமளவு அவர் வாத நியாயங்களை அளித்தாலும் பிச்சமூர்த்தியின் இதுவரை காலமொத்த இயக்கம் அவரது ஸ்தானத்தை காட்டுவாத்து மீறியே உறுதிப் படுத்துகிறது.

சுமார் நாற்பது வருஷகால இலக்கிய இயக்கம் ந.பி. யினுடையது. இந்த நாற்பது வருஷங்களில் அவர் பாரதியின் விடுதலை மூச்சினால் பாதிக்கப்பட்ட ஒரு கால கட்டம், அடுத்து தொடர்ந்த சுதந்திர இந்தியாவின் ஆரம்ப காலம், இன்றைய நிலை போன்ற யாவற்றினூடும் அவ்வளவாக பாதுகாப்பானது என்று சொல் முடியாத பொருளாதார நிலையில் உழன்று எழுதி வருபவர், இதை நான் குறிப்பிடுவதின் காரணம் அவரோடு சமகால இயக்கம் உள்ள பாரதிதாஸன், தேசிகவிநாயகம் பிள்ளை, நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை, ச.து சுப்ரமண்ய யோகியார் போன்றவர்களோடு அவரை ஒப்பிடு முகமாகவே. (புதுமைப்பித்தனோடும், கு.ப. ராஜகோபாலனோடும் ஒப்பிடவில்லை. காரணம் இவ் விருவரினுடைய மூல இயக்கம் கவிதைத் துறையில் விழாததும், அவர்கள் கவி இயக்கம் பரவலாக இல்லாததுமாகும்.) மேற்குறிப்பிட்ட கவிஞர்கள் வாசகப் பார்வையை ஆக்ரமித்தவர்கள். காரணம் விளக்கத் தேவையற்ற அப்பட்டமான விஷயங்கள்; 'சீர்திருத்த' நோக்கம், தேசியம், அவ்வப்போது சாகிற பெருந் தலைகள் போன்றோர்க்கு கவி கட்டுதல். யாவற்றுக்கும் மேல் ஒரு லேசான கவிச்சத்து இளகின நடை ஆனால் அந்த தலைமுறையிலேயே எழுதின ந. பி. யின் எழுத்து அவர்களுடையதைவிட சோதனைத் தன்மை வாய்ந்திருந்தது. அவர் பார்வை ஒரு மெய்க் கவிஞனுடையதைப்போல சுற்றுடலைகவியுணர்வோடு தீண்டியது இது நான் மேற்சொன்னவர்களிடையே குறைவு கவியுணர்வோடுதீண்டுதல் என்றால், அழகுணர்ச்சி ஆத்திரம், மனிதாபிமானம் என்கிற உள்ளுணர்வுகளோடு நின்றுவிடுதல் என்பதாகும்.மற்றவர்களோ தலைவர்கள் கட்சிகள் என்று சென்று உருகித் தளர்ந்து விட்டவர்கள்.

இரண்டு கவிதைகள்

சிவன் துணை

பூ. மாணிக்கவாசகம்

ஏழ்மைப் புழுதியில்
கழுதைப் பெரு மூச்சில்
புரண்டு உருண்டு எழுந்த விளைவில்
சிவன் கோலம் –

திரு வோடு ஏந்தி
வெந்த சோற்றுக்கு வீட்டுப் படி யேறி
நொந்த உள்ளத்தில் நாய்ப்பத்தல் நடமாட
'போ போ'
ஏன்?
வாழ்வு நாடகத்தின் ஒத்திகை தவறோ
மறந்தே போனேன், பார்வதி வரவில்லையே.

நனவைத் தேடி

சாக்கடைத் தேக்கம்
பணப்புழுக்கள் நெளியும் விளைவு
நாற்றத்தின் நடுவில்
நிலை மறந்து மணம் நுகர்ந்து
புழுவில் புழுவாய் நீந்தும் விழைவில்
அவன் அடி பெயர்க்க—
'நில்லப்பா'
தனை மறந்து கற்பனை பிறந்து நரளேந்தி
எழுது கோல் கொண்டு இவன் செல்ல
திறந்து கொண்டன என் இமைகள்

இந்த 'அசல்' கவித்வம் லேசில் சேமிக்கப்படக் கூடியது அல்ல வாழ்வின் முரண்பாடுகளூடே நுண்மை உழன்று செல்லும்போது அது அதி தீட்சண்யமும் நிதானமும் பொருந்தியதானால்தான் கவித்வத்தை இழக்காதிருக்க முடியும். பெரும் நம்பிக்கையளித்த பாரதிதாஸனை எங்களுக்குத் தெரியும். அவர் இறுக்கமாக அநுபவத்தைச் செறித்து அளிக்கவில்லை; அவர் காலத்திலேயே மேல்நாடுகளில் நிகழ்ந்த கவி இயக்கம் எதுக்கும் அதைப்புக் காட்டவில்லை. இக்குற்றச் சாட்டிலிருந்து தப்பும் அந்த தலைமுறை கவிஞர் ந. பி. ஒருவர்தான். (பு பி.கு.ப.ரா.வைவிட) சில அடிப்படைகளை ஏற்றுக்கொண்டு அவற்றின் தளத்தில் நின்று இக் கவிகளை நிதானிக்கக்கூடிய வாசகப் பொறுப்பை உங்களிடம் எதிர்பார்த்துச் சொல்கிறேன். அதனால் மேலோட்டமாகவும் பரவலாகவுமே இக்கருத்துக்கள் சொல்லப்படுகின்றன.

இந்த அளவுக்கு ஒரு தலைமுறையினூடே தாக்குப்பிடித்த ந.பி.யின் கவித்வம் இன்றைய புதுக் கவிகளினூடேயும் இளமைச் செருக்கோடேயே ஊடுருவுகிறது .இதுதான் அவரது விசேஷம்

சரி, டி கே து குறிப்பிடாவிட்டாலும் இதைக் குறிப்பிடுகிறேன்: ந.பி. யை சி சு செ புதுக் கவிதை 'முன்னோடி' என்கிறாரே அதை சர்ச்சைக் குரியது என்று சொல்லி ஒதுக்கலாம் ஏனெனில் கு ப.ரா.பு.பி. இருந்தார்கள். இன்றைய இளங் கவிகளையும் தமிழில் புதுக்கவிதை எழுதத் தூண்டியது ந.பி. அல்ல என்றே ஓரிருவரின் சொல் மூலம் நாம் வாதுக்கு கொணரலாம். அப்படியே இருப்பினும் தன்கவித்வத்தை எவ்விதச் சூழலின் ஈர்ப்புக்கும் தளரவிடாமல் பாதுகாத்து போகப் போக சோதனை செய்துகொண்டே தன் 'டெக்னிக்'கை 'சட்டையுரிப்பு செய்யும் தீவிரத் தன்மையை நாம் ஒதுக்கமுடியாது. இவை நிரூபிக்கத் தேவையற்ற விஷயங்கள். ஆனால் நிரூபிக்க வேண்டியது 'தரம்.' ஏற்கெனவே சொன்னபடி சில முக்கிய அடிப்படைகளை ஏற்றுக்கொள்பவர்களுக்கு அந்த வேலையையும் நானே செய்ய வேண்டிய சிரமம் இல்லை. அதோடு ஏற்கனவே ந பி யின் கவித்தரம் பற்றி சொல்ல முயன்றுள்ளேன். அந்த வாத நியாயங்கள் பாதிக்கப்படாதவரை நான் சிரமப் படவேண்டாம்.

அடுத்தது சில 'ஊகங்கள்' ந பியை போன தலைமுறை பாரதிதாஸன் முதலியவர்களுடன் ஒப்பிட்டால் அவர் டி.கே.து.பார்வையிலேயே தனித்த உயர் ஸ்தானம் பெறுவாரென்பது நிச்சயம் அதே கவி இன்றுவரை எழுதியுள்ள தொகையும், தொட்டுள்ள அநுபவங்களும், செய்த சோதனையும் பல்வேறானவை, அவரை இன்றைய புதுக் கவிகளோடு ஒப்பிட்டு இவரைவிட சி. மணி போன்ற ஒருவரை மேஜரானவர் என்று சொல்லுமளவு. நீண்ட கவிதைகள் அதிகம் எழுதியுள்ள சி. மணி ஒரேவித சோதனைக்குமேல் நீண்ட கவிதைகளில் முயலவில்லை. சுந்தர ராமசாமியும், சி. மணியும் தம் தொனி தளராமல் சோதனைகளையும் விஸ்தரித்து தம் பார்வையையும் பரிபூரணமாகவெளியிட்டால் ந.பி.யை விட உயர்ந்த சாதனை காட்டக்கூடும். ஆனால் அது ஊகம்! அவர்கள் இளைஞர்கள்: வாழ்க்கையோ அதைப்பற்றிய நமது நிதானிப்புகள் யாவற்றையும் சிதறடிக்கும்காட்டாறு. ந.பி. யைப்போல் வாழ்வூடே எதிர்நீச்சுப்போடும் முரட்டு கவித்வம் அபூர்வம். வாழ்வின் போர்க்கரங்கள் பட்டு முதலில் உதிர்ந்து விடக்கூடிய அவ்வளவு மென்மையான பூச்சு அழகுணர்ச்சி. ஆனால் அவ்வுணர்ச்சி ஒரு வியக்தியின் ஒவ்வொரு தளத்தூடேயும் ஊறிப்படிந்துவிட முடியும். எந்த முரட்டுத் தாக்குதலாலும்வாழ்க்கையினால் உதிர்த்துவிட முடியாமல் படலம் படலமாக பாரதியிடமும் புதுமைப்பித்தனிடமுமிருந்து அந்த உள்ளுணர்வு எழுந்துகொண்டே இருந்ததை அவர்களது வாழ்க்கையையும் கலை இயக்கத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் காண்கின்றோம். அவர்கள் வரிசையில் இக்காரணத்தை ஒன்றாக முன்னிட்டு நிறுத்தக் கூடியவர்கள் ந பிச்சமூர்த்தி. அவர்கவித்வம் வாழ்க்கையை வென்றுவிட்டது. திரௌபதியின் துகில் துச்சாஸனனை வென்றதுபோல். கவி முன் விரியும் களம் வெறும் ஜோடனைத் தொழிலல்ல. வாழ்க்கையாகும். எனவே இன்றைய புதுக் கவிகள் மேஜர்களாவதை நாம் எதிர்பாரத்திருக்கலாமேயன்றி அதுக்குமேல் ஏதும் இப்போது சொல்லமுடியாது. இவை நபி'யின் ஸ்தானத்தை காட்டு வாத்து வை மீறிப் பார்த்து நிதானிக்க முயலும் வரிகள்.

மெக்ஸிகோ கவிதை

இடியும் சுவர்

ஜார்ஜ் பொவரிவ்

இடிந்து வரும் சுவர் ஒரு
நல்ல பொருள் தான்,

ஒரு நகரை காப்பாற்றுகிறது அது
இந்த மாதிரி நகரை;

புதுச் சுவரோடு வட சுவரை
பூட்ட வைக்கும் நகரம்.

இடிந்து வரும் அஸ்திவாரம்
அது ஒன்றுதான்

ஒரு சமுதாயம் கட்ட
இருக்கும் ஒரு வழி.

செங்கல்கள் சரிந்து
சிதறி விழட்டும்

இடிந்து வரும் சுவர் ஒரு
அழகுப் பொருள் தான்

குறித்த ஒரு காலத்துக்கு,
இன்பம் நிரந்தரமான தல்ல

மாற்றம் வேண்டும் அதுக்கு,
நிலைக்க அது இடிந்தாக வேண்டும்.

(தமிழாக்கம் கி. ஆ. ச., சி. சு. செ)

உங்கள் காதுக்கு

''தீபம்'' ஏட்டின் மே இதழில் 'புதிய புத்தகங்கள்' பகுதியில் 'இன்றைய தமிழ் இலக்கியம்' என்னும் வாசகர் வட்டம் தொகுப்பு நூலைப் பற்றிய மதிப்புரை வெளியாகியிருக்கிறது கு. ப. ரா. வின் சிறுகதை, க. நா. சு. வின் விமர்சனக் கட்டுரை, சிதம்பர ரகுநாதனின் கவிதை இவைகள் எதுவும் தொகுப்பில் சேராததற்கு மதிப்புரையாளர் வருத்தப்படுவதாகத் தெரிகிறது. விடுபட்ட பெயர்களைக் குறிப்பாகச் சொன்னவர், தொகுப்பிலிருந்து விடுபட்டிருக்க வேண்டிய சில படைப்புக்களை சீரான தரத்திற்கு ஏற்றதல்ல என்கிற அடிப்படையில் ஒதுக்குவதற்கு இனம் காட்டியிருந்தால் நன்றாயிருக்கும். விடுபடுதல், ஒதுக்குதல், மறத்தல் என்கிற இயல்புக்கு நூலை உட்படுத்திய மதிப்புரையாளர் கூடவே தொகுத்த அளவில் வாசகர் வட்டத்தினர் தங்கள் பணியைச் செம்மையாகச் செய்துள்ளனர் என்ற பாராட்டையும் அருளியிருப்பது அவருடைய நிதானமற்ற சமரச வித்தையையே புலப்படுத்துகிறது.

ஏழு சிறுகதைகளும், ஐந்து கட்டுரைகளும், பன்னிரெண்டு கவிதைகளும், இரண்டு நாடகங்களும் உள்ள தொகுப்பு நூலில் பாரதியின் 'அக்கினிக் குஞ்சு' பற்றிய கட்டுரைக்கு மட்டும் உட்புகுந்த ரீதியில் சில வரிகளை ஒதுக்கியிருப்பது கட்டுரையின் கனத்துக்குச் சான்றாகக் கொள்ளத் தூண்டுகிறது 'சின்னது' 'பிதுக்கித் தள்ளி விடுகிறது' போன்ற பிரயோகங்கள் மட்டமானவையாக மதிப்புரையாளருக்குப் படுகின்றன. 'மட்டமாயிருக்கின்றன' என்ற அப்பட்டமான வார்த்தை எந்த ரகத்தைச் சேர்ந்தது என்பது மதிப்புரையாளருக்குத்தான் வெளிச்சம். அப்பால் மகுடம் சூட்டப்பட்டுள்ள பிரயோகங்களைப் பரிசீலித்தோமானால் சின்னச் சங்கரன் கதை' என்று தலைப்பிட்ட பாரதியை எங்கே போய் நிறுத்துவது? கொச்சைக்கு இலக்கியத்தில் உள்ள இடம் குறித்த சர்ச்சை ஒரு புறம் இருக்க, கால ஓட்டத்தின் கதியில் பல்வேறு விஷயங்களைப் பற்றியும் லாவகமாகச் சொல்லும் தகுதியை மொழிக்கு ஏற்ற முற்படும்போது, நடைபற்றிய நுணுக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் முணுமுணுத்து அங்கலாய்ப்பது வளரும் தமிழைத் தடுக்க முற்படும் வரட்டு முயற்சியாகும்.

பாரதி விழா ஒன்றிலே பேசிய 'தீபம்' ஆசிரியர் கூட புதிய பதப் பிரயோகங்களுக்காகவே பாரதியைப் பல படப் புகழ்ந்தார். அந்தக் கவியின் சிறப்பை விண்டுரைக்க வரும்போது அசாதாரணமான பதச்சேர்க்கைகள் வந்து விழுமானால் பாரதி வழியில் மறுமலர்ச்சி நடை மிடுக்குடன் முன்னேறுகிறது என்று தான் பொருள். அதை இனம் பிரித்து தனித்துக்காட்டி கொண்டாட வேண்டியது போக, 'மட்டமானது' என்று மதிப்புரை எழுதுவதில் யாருக்கு லாபமோ?

'கத்தும் குயிலோசை' என்று பாரதி போட்டிருக்கிறான், கழுதையல்லவா கத்தும். குயில் கூவத்தானே செய்யும் என்ற அடிப்படையில் பாரதியை மட்டம்' என்று சொல்விடலாமா? அந்த வார்த்தைக்குப் பின்னே உள்ள தாத்பர்யத்தை உணரத் துடிக்க வேண்டாமா? எதுகை மோனை வித்தைக்கு அப்பால் கவி உள்ளம் ஆழமாக உணர்த்தும் செய்தியைத் துருவிப்பார்க்க வேண்டாமா? பேராசிரியர் அ. சீனிவாசராகவனைக் கேட்டால் மூன்று பக்க விளக்கத்துடன் 'கத்தும் குயிலோசை' பற்றி தெளிவு தருவார் 'வார்த்தைகளை உமிழ்ந்தான்' என்று எங்கோ படித்ததாக நினைவு. வாயைத் திறப்பவர்கள் எல்லோரும் ஒரே மாதிரியாகப் பேசுவதில்லை. திக்குவது, கொட்டுவது, முத்து உதிர்ப்பது. அளப்பது எல்லாம்தான். 'உமிழ்ந்தான்' என்றவுடன் எச்சிலை நினைத்துக் கொண்டு அவஸ்தைப்படுவானேன்? பிதுக்கித் தள்ளுவதும் அப்படித்தான். கவிதையின் அழகுணர்வைக் கெடுக்காமல், வரியின் வேகத்தை வெளிப்படுத்த உதவும் பதப் பிரயோகம்.

முன்பெல்லாம் இலக்கியத்துக்கான விஷயத்திலே தீண்டாமையைக் கடைப்பிடித்து குறிப்பிட்ட சங்கதிகளை, ஒதுக்கி அருவருப்புக் காட்டினார்கள் இப்போது நடை விஷயத்தில் அத்தகைய போக்கைக் கடைப்பிடித்து, உட்பொருள் உணராமல் அரண்டுபோய் 'அச்சக்கோ' கொட்டுகிறார்கள் இதெல்லாம் வளரும் தமிழுக்கு ஊறு செய்வதன்றி வேறில்லை.

—சு. ச.

நீ

பி. சோணாசலம்

ஒளி + இருள் =
இருள் ஒளி இணைகோடு
வெட்டும் அனந்தம் நீ

எண்ணைக் கதிர்களின் குவியம்
மௌனம் சொல் சூல்கொண்ட திரட்சியா?
மௌனக் கடலில் ஓசை அலையா?

நீ அர்த்த நாரி
விழிப்பு, உறக்கம்
சொப்பனவஸ்தை.

நீ வெறும் உயிர்ப்பு மரம்.
நினைப்பும், மறப்பும்
உன் இரட்டைக் கிளைகள்
என் கபால முட்டையில்
அடங்காத கரு. நீ யார்?
உன் கையில் கால ருத்ராக்ஷம்
உருட்டிக் கொண்டு தவமா?

மாயைத் திரையில் சித்திரம் நான்
நான் திரை, நான் சித்திரம்,
நான் வர்ணமும் கூட,

நீ 'நான்'ல்ல
'நான் நண்டாகி
என் வயிறு கிழிந்து
நீ ஜனிக்கும் வரை
நான் நீயல்ல.

எழுத்து பிரசுரம் வெளியீடுகள்

1,	சொர்க்கத்தில் சம்பாஷணை	வ. ரா.	ரூ	3-00
2.	வசந்த காலம் கட்டுரைகள்	,,	ரூ.	3-00
3.	பதினெட்டாம் பெருக்கு (சிறுகதைகள்)	ந. பிச்சமூர்த்தி	ரூ.	4-00
4.	வழித்துணை (கவிதைகள்)	,,	ரூ.	2-00
5.	அகல்யை ஓரங்க (நாடகங்கள்)	கு. ப. ரா.	ரூ.	4-00
6.	ஆண்சிங்கம் (சிறுகதை)	வல்லிக்கண்ணன்	ரூ.	4-00
7.	சில விஷயங்கள் (கட்டுரைகள்)	சிட்டி	ரூ.	3-00
8.	சத்யாக்ரகி (சிறுகதைகள்)	சி. சு. செல்லப்பா	ரூ.	4-00
9.	மணல் வீடு ,,	,,	ரூ.	4-00
10.	கோடை வயல் கவிதைகள்)	தி. சோ. வேணுகோபாலன்	ரூ.	1-25
11.	கனவுப் பறவை (சிறுகதைகள்)	கர்ணன்	ரூ.	2-50
12.	புதிய பாதை நாடகம்	கோமல் சுவாமிநாதன்	ரூ.	3-00

விபரங்களுக்கு எழுதவும்

கிடைக்குமிடம் :

எழுத்து பிரசுரம்

19-A, பிள்ளையார் கோவில் தெரு, சென்னை-5.

எழுத்து

சந்தா விகிதம்

ஆண்டுச் சந்தா	ரூ. 6-00
மூன்று ஆண்டுகள்	ரூ. 15-00
வெளி நாடுகளுக்கு	ரூ. 8-00
மூன்று ஆண்டுகள்	ரூ. 20-00
தனிப்பிரதி	50 பைசா

பிரதி இங்கிலீஷ் மாதம்
முதல் தேதி வெளிவரும்

விவரங்களுக்கு :

எழுத்து

19-A, பிள்ளையார் கோவில் தெரு,
சென்னை-5

EZHUTTHU

Tamil literary monthly

ADVERTISEMENT TARIFF

INSIDE PAGE

Full Page	15 × 20 cms	Rs. 80-00
Half ,,	15 × 10 7½ × 20 ,,	Rs. 40-00
Quarter ,,	7½ × 10 15 × 5 ,,	Rs. 20-00
Back cover		Rs. 100-00
Inside covers		Rs. 90-00

Concession for Contract Page

EZHUTTHU

19-A, Pilliar koil St., Madras-5

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19-A, Pilliar Koil Street, Madras-5
Printed by M. Ramanatha Rao for Central Press, 97, Big Street, Triplicane Madras-5